# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



## இதோ, நான் புதிய காரியத்தை செய்கிறேன்

ஏசாயா 43:19


THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

January-February 2024
Volume : 64

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue :1

## தமிழ் பிரதேச தலைவரிடமிருந்து........!



Rev. ஸ்டீவ் ஜெயராஜ்

# புதிய ஆரம்பம்

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரணஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு, நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

சர்வசிருஷ்டிக்கும் எஜமானனாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய நாமத்தில் உங்களோடு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். "கர்த்தர் சொல்லுகிறதாவது" ...**"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்திரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்" (ஏசாயா 43:19).**

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம் அவருடன் நெருங்கியிருக்கவும், அன்புகூரவும், அவருடைய திருவுளச் சித்தத்தை நிறைவேற்றவும் விரும்புகிறார்.

நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்திரத்திலே தண்ணீர்களையும், அவாந்தரவெளிகளிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால் மிருகஜீவன்களும் என்னை கனம்பண்ணும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 43:20). "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" (ஏசாயா 43:21). ஆனாலும் கர்த்தருக்கு அவர் தெரிந்துகொண்ட யாக்கோபைக் குறித்து ஒருகுறைவு ஏற்படுகிறது. "...யாக்கோபே நீ என்னைநோக்கி கூப்பிடவில்லை; இஸ்ரவேலே, நீ என்னைக் குறித்து மனஞ்சலித்துப் போனாய்" (ஏசாயா 43:22) என்று கர்த்தர் அங்கலாய்க்கிறார். தேவதூதர்களின் ஐக்கியத்தைப் பார்க்கிலும் மனிதனோடுதாம் நன்கு ஐக்கியம் கொள்ளமுடியும் என்பதற்காகத்தான் மனிதனை தம்முடைய சாயலிலே சிருஷ்டித்தார். அவராலே சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் அவருடைய கட்டளையை மீறினதினாலே பாவத்தில் வீழ்ந்து சாபத்தைத் தன்மீது வருவித்துக் கொண்டாலும், சர்வவல்லமையுள்ள தேவன் நம்மேல் இரக்கம் பாராட்டி நம்மேல்வைத்த அன்பினிமித்தம் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் மனிதனைத் தூக்கியெடுக்க மனிதனாக அவதாரம் எடுத்தார். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து மனிதனாக இந்த உலகத்திலே வாழ்ந்து நன்மைசெய்கிறவராகச் சுற்றித்திரிந்தார். மனுமக்களுடைய துயரங்களைப் போக்கினார். சத்தியத்தைப் பிரசங்கித்தார். மனிதன் எவ்விதம் வாழவேண்டும் என்பதற்கு அடிப்படையாக உபதேசங்களைக் கொடுத்தார் (மத்தேயு 5,6,7) .

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஜனங்களுடைய வாழ்க்கையிலே புதிய ஆரம்பங்களைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார். இதைத்தான் ஏசாயா தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த வாக்குத்தத்தத்தை எழுதிவைத்திருக்கிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே அநேகருடைய வாழ்க்கையிலே புதிய ஆரம்பங்களைக் கொடுத்தார். குஷ்டரோகத்தின் நிமித்தம் பட்டணத்துக்கு புறம்பாக்கப்பட்ட மனிதர்களை அவர் சுகப்படுத்தினார். மீண்டும் பட்டணத்திற்குள் வாழ்வதற்குரிய ஒருபுதிய ஆரம்பத்தை அவர்களுடைய வாழ்க்கையில் உண்டாக்கினார்.

சிறுபெண் (மத்தேயு 9:18-25), நாயீன் ஊர் வாலிபன் (லூக்கா 7:11-15), லாசரு (யோவான் 11:1-44) ஆகிய மூன்றுபேர் மரித்துப் போனார்கள். சிறுபெண்ணின் சடலம் வீட்டிலிருந்தது. மரித்த வாலிபன் சடலம் ஊர்வலத்தில் இருந்தது. லாசரு கல்லறையில் வைத்து நான்கு நாட்கள் ஆயிற்று. எல்லாருக்கும் ஆண்டவர் மீண்டும் ஜீவனைக் கொடுத்து உயிர்த்தெழச்செய்து வாழ்க்கையில் புதிய ஆரம்பத்தைக் கொடுத்தார். வியாதியஸ்தர்கள், பிசாசின்பிடியில் இருந்தவர்கள். அனைவருக்கும் புதிய வாழ்க்கையைக் கொடுத்தார்.

இன்றும் எதிர்கால வாழ்க்கையைக் குறித்து நம்பிக்கையற்ற நிலைமையில் இருக்கிறவர்களுக்குப் புதுஆரம்பம், புதுவாழ்வு இரட்சகர் இயேசு கொடுக்கிறார். இதுபோன்று தங்கள் வாழ்க்கையில் புதியஆரம்பத்தைப் பெற்ற மூன்று நபர்களைக் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

## 1.யோனாவின் வாழ்வில் புதிய ஆரம்பம்

கர்த்தருடைய வார்த்தை யோனாவிற்கு உண்டாகி மகாநகரமாகிய நினிவேக்குப்போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கி என்று சொன்னார். காரணம், அந்த ஜனங்களின் அக்கிரமம் கர்த்தருடைய சமுகத்தில் வந்து எட்டினது. யோனாவோ கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி நினிவேக்குப் போகாமல் தர்ஷீசுக்குபோக கப்பல் ஏறினான். தேவனுடைய சித்தத்தை யோனா நிறைவேற்றாமல் சுயமாய் சிந்தித்து, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல்போனபடியினாலே மிகப்பெரிய ஆபத்து அவனுடைய பயணத்திலே உண்டாயிற்று. அதன் விளைவுவாக யோனா கடலில் தூக்கி வீசப்பட்டான். அதன்பின்பு

i) மீனின் வயிற்றிலிருந்த யோனா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் (யோனா 2:1).

ii) கூக்குரலிட்டான் (யோனா 2:2).

iii) கர்த்தருடைய கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டிருந்தாலும், உமது பரிசுத்த ஆலயத்தையே நோக்குவேன் என்று கர்த்தரிடத்தில் கெஞ்சுகிறான் (யோனா 2:4).

iv) யோனாவின் ஆத்துமா தன்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தான். அவன் விண்ணப்பமும் கர்த்தரிடத்தில் சேர்ந்தது என்ற நம்பிக்கை உண்டாயிற்று (யோனா 2:7).

v) எனவே யோனா துதியின் சத்தத்தோடு கர்த்தருக்குப் பலியிடுவேன் என்று பொருத்தனை செய்தான் (யோனா 2:9).

அப்பொழுது இரண்டாந்தரம் கர்த்தர் யோனாவோடு பேசினார். அவன் கீழ்ப்படிந்து நினிவேக்குப்போய் கர்த்தருடைய வார்த்தையை கூறினான் (யோனா 3:1,3). நினிவேயின் மக்கள், பெரியோர், சிறியோர், ராஜா, அவன் பிரதானிகள் அனைவரும் மனந்திரும்பினார்கள் (யோனா 3:5-10). நினிவேப் பட்டணத்து மக்களுக்கும், யோனாவுக்கும் கர்த்தர் புதிய ஆரம்பத்தைக் கொடுத்தார்.

## 2. பேதுருவின் வாழ்வில் புதிய ஆரம்பம்

இயேசு கலிலேயா கடலோரமாய் நடந்துபோகையில் சீமோன் பேதுருவும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைப்போட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைகண்டு ‘‘என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்’’ என்றார்.

மூன்றரை ஆண்டுகள் இயேசுவோடு கூட இருந்த பேதுரு “நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்'' என்றான். (மத்தேயு 26:35; மாற்கு 14:31).

இயேசுவை பேதுரு மறுதலித்ததுமன்றி “அந்தமனுஷனை அறியேன் என்று சொல்லி சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான்” (மத்தேயு 26:74). கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கி பார்த்தார். பேதுரு கர்த்தருடைய வார்த்தையை நினைவுகூர்ந்து, மனங்கசந்து அழுதான் (லூக்கா 22: 61,62).

பேதுருவின் வாழ்க்கை தோல்வியில் முடிந்தது என்று நாம் நினைக்கலாம். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு ஸ்திரீகளுக்கும், பதினொருசீஷர்களுக்கும் காட்சியளித்து “என் சகோதரர் கலிலேயாவுக்குப்போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னை காண்பார்கள் என்றார்” (மத்தேயு 28:10,16). மீண்டும் இயேசு அவர்களை சந்தித்து “நீங்கள் சிலநாளைக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டு போகாமல் என்னிடத்தில் கேள்விபட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் ” (அப்.1:3-5).

பெந்தேகொஸ்தே என்னும் நாளிலே அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளினவரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று கூடி வந்திருந்ததிரளான ஜனங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து ஆதாரங்களோடு தைரியமாகப் பேசினான் (அப்.2:14-36). அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப்.2:41). இதன் மூலம் பேதுருவின் ஊழியத்திலே கர்த்தர் ஒருபுதிய ஆரம்பத்தை கொடுத்தார். அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்திலே பேதுருவின் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்ததை நாம் காணமுடியும் (அப்.1-12).

### 3.சவுலின் வாழ்வில் புதிய ஆரம்பம்

சவுல் என்ற பவுலின் வாழ்க்கையிலும் கர்த்தர் அவனை சந்தித்து அவனுடைய வாழ்க்கையில் புதியஆரம்பத்தை கட்டளையிட்டார் (அப்.9-28).

பிரியமானவர்களே, நம்முடைய ஆண்டவர் எந்த சூழ்நிலையிலும் நமக்கு புதிய ஆரம்பத்தை கொடுப்பதற்கு வல்லவராயிருக்கிறார். 2024ம் வருடம் 2023ஐபார்க்கிலும் உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க கர்த்தர் உதவிசெய்வாராக! வனாந்திரமானாலும் வழியை உண்டுபண்ணவும், அவாந்தரவெளியானாலும் ஆறுகளை உண்டாக்குவதற்கும் நம் கர்த்தர் வல்லவர். பயப்படாதிருங்கள். கர்த்தரை நம்புங்கள். அவரைநோக்கி கூப்பிடுங்கள். அவர் உங்களுக்கு உதவிசெய்வார்.

**அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

**Rev. ஸ்டீவ் ஜெயராஜ்**
தலைவர், தமிழ் பிரதேச ஏ.ஜி சபைகள்

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# அமைதி வேளை: என் தேவனும் நானும்


Rev. Dr. ஜெரி டேனியல்

ஆசிரியர், பரிபூரண ஜீவன்

மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.


தேவ பிள்ளைகள் அனுதினமும் தேவனோடு தனித்து ஜெபத்திலும் அவர் வார்த்தையோடும் தொடர்பு கொள்ளும் நேரம் அமைதி வேளை (Quiet Time) என்று அழைக்கப்படுகிறது. அது தனியாக அவரோடு நாம்செலவிடும் அன்றாட பயிற்சியாகும். அது அவர் பிரசன்னத்தை அனுபவித்து, அவர் சத்தம் கேட்கிற நேரம். இதனைச் செய்ய தவறுகிற கிறிஸ்தவர்கள் குளிர்ந்தும், பின்மாற்றத்திலும் சென்று விடுவார்கள். ஆகவே அமைதி வேளையை தவறாமல் தினமும் பின்பற்றினால் தேவனில் அனுதினமும் வளரலாம். இயேசு பிதாவோடு தனித்திருந்தார் (மத்தேயு 14:23; லூக்கா 5:16) என்று வேதம் கூறுகிறது. அதுவே அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் வெற்றிக்கு காரணமாயிருந்தது. இந்த புதிய 2024 ஆண்டில் தேவனோடு உள்ள உறவில் நாம் பெலப்பட, வெற்றி வாழ்வு வாழ, தேவனோடு தனித்து அதிக நேரம் செலவுப் பண்ண தீர்மானிப்போம்!

## 1. அமைதி வேளையின் நோக்கம்
## PURPOSE of the Quiet Time

- அமைதி வேளையின் முதலாவது நோக்கம் தேவனோடு தொடர்பு கொள்வது. தேவனும் இதைத்தான் விரும்புகிறார். அதற்காகத்தான் அவர் மனிதனைப் படைத்தார்.
- இரண்டாவது நோக்கம் ஆவியின் பெலத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்காக. கிறிஸ்தவ வாழ்க்கை உலகம், மாமிசம், பிசாசு இவற்றோடு போராடுகிற ஒரு வாழ்க்கை. எனவே ஒரு பேட்டரியை எப்படி சார்ஜ் ஏற்றி உபயோகப் படுத்துவோமோ அவ்வாறே நம் ஆவிக்குரிய பெலத்தை அவர் சமுகத்தில் காத்திருந்து அனல் மூட்டி எழுப்ப வேண்டும். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைவார்கள் (ஏசாயா 40:31).
- கடைசியாக, அவரோடு நேரம் அனுதினமும் செலவழிக்கும்போது அன்றன்றைக்கு தேவையான புதிய கிருபை, அபிஷேகம், வழிநடத்துதல் நமக்கு கிடைக்கிறது (புலம்பல் 3:23; சங்கீதம் 92:10).

## 2. அமைதி வேளைக்கு ஆயத்தம்
## PREPARATION for the Quiet Time

நாம் எதையாவது நல்ல முறையில் செய்ய வேண்டுமானால் ஆயத்தம் அவசியம். திட்டமிடத் தவறினால் தவறுவதற்கு திட்டமிடுகிறோம். எனவே தனியான இடம், குறிப்பிட்ட நேரம், சில உபகரணங்களைத் தேர்வு செய்வது மிக அவசியம்.

**இடம் :** அமைதியான, தனிமையான ஓர் இடத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். இயேசு பிதாவைத் தனிமையில் சந்தித்தார் (மாற்கு 1:35). ஆள் ஆரவாரமில்லாத அமைதியான மலைப்பகுதியை இயேசு தேர்ந்தெடுத்தார். மணிக்கணக்கில் பிதாவோடு பேசினார். நாமும் மக்கள் சந்தடியில்லாத அமைதியான இடத்தைத் தெரிந்து எடுக்க வேண்டும்.

**நேரமும், காலமும் :** இது அனுதின செயல், எனவே ஒரு குறிப்பிட்ட நேரம், சரியான இடம் ஆகியவற்றைத் தெரிவு செய்ய வேண்டும். காலை நேரம் தேவனோடு தொடர்பு கொள்ள மிக ஏற்ற நேரம். முதலாவது நாம் தேவனை சந்தித்துப் பேசுவது அவர் மேல் நாம் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறது. நாம் அதிகமாய் நேசிக்கும் ஒருவரோடு பேசும்போது நேரத்தை எண்ணமாட்டோம். குறைந்தது ஒரு மணி நேரமாவது அமைதி வேளையில் நாம் தேவனோடு செலவிட வேண்டும் (மாற்கு 14:37).

**தேவையான பொருட்கள் :** அமைதி வேளை பயனுள்ளதாய் அமைய பைபிள், நோட்புக், பேனா, மற்றும் அனுதின மன்னா போன்ற ஒரு தியானப் புத்தகம் ஆகியவற்றை உபயோகிக்கலாம். தேவன் நமக்குத் தரும் வெளிப்பாட்டைக் குறிக்கவும், முக்கியமான ஜெபக்குறிப்புகள், ஜெபத்திற்கு நாம் பெற்றுக்கொண்ட பதில் இவைகளை குறிக்க நோட் புக் அவசியம்.

## 3. அமைதி வேளையின் செயல்முறைத் திட்டம்
## PROGRAMME of the Quiet Time

அமைதி வேளையில் தேவன் வேத வசனங்கள் மூலம் நம்மோடு பேசுவார். நாம் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுவோம் அமைதி வேளை நமக்கு பயனுள்ளதாய் அமைய கீழ்வரும் முறைகள் நமக்கு உபயோகமாயிருக்கும்.

**வேதத்தை வாசித்தல் (READ):** வேதத்தை எடுத்து ஏதாவது ஒரு பகுதியை வாசிப்பதைக் காட்டிலும் ஒரு புத்தகத்தை தேர்வு செய்து தொடர்ந்து வாசியுங்கள். அனுதின வேதவாசிப்புக் கருவிகளைப் பயன்படுத்தினால் அதில் சொல்லப்பட்ட பகுதியைத் தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் தாய் மொழி வேதாகமம், அதோடு ஆங்கில வேத புத்தகத்தையும் உபயோகிக்கலாம். மெதுவாக ஒவ்வொரு வார்த்தையையும், வரியையும் உணர்ந்து வாசியுங்கள். நிச்சயம் தேவன் உங்களோடு பேசுவார்.

**வேதத்தை தியானித்தல் (REFLECT):** வசனத்தை தியானித்தில் அமைதி வேளையில் மிக முக்கியமானது (சங்.1:2; யோசுவா 1:8). பவுல் தீமோத்தேயுவிடம் நான் சொல்கிறவைகளைச் சிந்தித்துக்கொள். கர்த்தர் எல்லாக்காரியங்களிலும் உனக்கு புத்தியைத் தந்தருள்வார் (2 தீமோ.2:7) என்று கூறுகிறார். இரவும், பகலும் வேதத்தை தியானிக்கிற மனுஷனுக்கு கர்த்தர் ஆசீர்வாதத்தை வாக்குபண்ணி யிருக்கிறார். வேதத்தை வாசித்த பின் கீழ்காணும் கேள்விகளைக் கேட்டு வசனத்தைத் தியானியுங்கள்

(S-P-E-C-I-A-L method).

1. என்னிடம் விட்டுவிடுவதற்கு ஏதாவது பாவம் இருக்கிறதா? (Sins to forsake?)
2. நான் பற்றிக்கொள்ள என்ன வாக்குத்தத்தம் உள்ளது? (Promises to claim?)
3. நான் பின்பற்ற ஏதாவது மாதிரி உள்ளதா? (Example to follow? )
4. நான் கீழ்ப்படியக் கட்டளை ஏதாவது இருக்கிறதா? (Command to obey?)
5. தேவனைப் பற்றி ஏதாவது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா? (Insights about God)
6. கடினமான வசனம் ஏதாவது உள்ளதா? (Any difficult verse? )
7. கற்றுக்கொள்ளப் பாடம் ஏதாவது உள்ளதா? (Lessons to learn?)

**குறித்து வைத்தல் (RECORD):** உங்கள் பிரயாசங்களின் பலனைப் பாதுகாக்க வேண்டும். நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை குறித்து வைக்க தவறாதீர். எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று நினைக்க வேண்டாம்.

நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களை குறித்து வைத்தல் குறிப்பிட்ட காலகட்டத்தில் உங்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

**ஜெபியுங்கள் (RESPOND):** நீங்கள் வாசித்த பகுதியிலிருந்து தேவன் உங்களோடு பேசுவார். அதைத் தொடர்ந்து நீங்கள் ஜெபத்தின் மூலம் அவரோடு பேசுங்கள். ஜெபிக்கும்போது... ஆராதித்தல், பாவ அறிக்கை, நன்றி செலுத்துதல், விண்ணப்பித்தல் ஆகிய படிகளைக் கையாளுங்கள். தேவனுடைய மகத்துவத்திற்காக ஆராதனையும், உணர்த்தப்பட்ட பாவங்களுக்காக... பாவ அறிக்கையும், அவரிடம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக நன்றியும், அவரைப் பிரியப்படுத்துகிற வாழ்க்கைக்கான வழி நடத்துதலுக்காகவும், கிருபைக்காகவும் விண்ணப்பம் செய்யலாம். உண்மையாய் செய்கிற ஜெபத்திற்கு அதிக பலன் உண்டு. அதற்கு அதிக நேரமும், ஒழுங்கும் மிக அவசியம். ஜெபக் குறிப்புகளைப் பயன்படுத்துங்கள். பதில் கிடைத்த ஜெபங்களைக் குறித்து வையுங்கள். பதில் கிடைத்த ஜெபங்களுக்கு நன்றி சொல்ல ஒரு நாளும் மறவாதிருங்கள்.

**நினைவிற்குக் கொண்டு வருதல் (RECOLLECT):** அமைதி வேளை 30-60 நிமிடங்களில் முடிந்து விடலாம். அந்த நாளில் நீங்கள் பற்பல காரியங்களில் ரொம்ப பிஸியாக இருக்கலாம். எனவே நேரம் கிடைக்கும் போதெல்லாம் காலையில் தேவன் உங்களோடு பேசியதை மனதில் நிறுத்தி வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த மறக்க வேண்டாம்.

## 4. அமைதி வேளையின் பிரச்சனைகள்
## PROBLEMS of the Quiet Time

தேவனோடு ஒரு கிறிஸ்தவன் தொடர்பு வைத்திருப்பதை சாத்தான் விரும்ப மாட்டான். அமைதி வேளையின்போது ஏற்படும் பல பிரச்சனைகளை மனதில் எண்ணாமல் தேவனுக்கு அர்பணித்து அதனை மேற்கொள்ளுங்கள். மனமிருந்தால் மார்க்கமுண்டு.

**ஒழுங்கு (DISCIPLINE):** அமைதி வேளை ஏதாவது ஒரு நாள் தடைபட்டால் வருத்தப்பட வேண்டாம். ஒரு வேளை ஆகாரம் சாப்பிடாவிட்டால் அடுத்த வேளை சாப்பிடுவதில்லையா? தவறுக்காக ஆண்டவரிடம் மன்னிப்புக் கேளுங்கள். ஒரு விருப்பமும், தீர்மானமும், தேவனைச் சந்திக்க வேண்டும் என்கிற தாகமும் இருந்தால் அமைதி வேளை ஒழுங்காக நடைபெறும். நேரத்திற்குப் படுக்கைக்குச் செல்லுங்கள். டி.வி. விளையாட்டு, செய்தித்தாள் போன்ற நேரம் திருடுகிற காரியங்களுக்கு ஜாக்கிரதையாய் இருங்கள்.

**வறண்ட நிலை (DRYNESS):** அமைதி வேளையில் எண்ணங்களிலே ஒரு போராட்டம் ஏற்படும். தொந்தரவில்லாத இடத்தைத் தேர்ந்தெடுங்கள். தேவையில்லாத எண்ணங்கள் உங்கள் மனதில் வரும். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7). அந்நிய பாஷையிலே ஜெபியுங்கள் (1 கொரி.14:14). முகத்தை நன்றாகக் கழுவி நீங்கள் இருக்கும் நிலையை மாற்றி உற்சாகமாய் ஜெபியுங்கள். சில நேரங்களில் அமைதி நேரம் சலிப்பாக தோன்றும். கர்த்தருடைய ஆவியானவர் எங்கேயோ அங்கே விடுதலை உண்டு (2 கொரி.3:17). ஆவியிலே ஜெபியுங்கள், சத்தமாய் வேதத்தை வாசியுங்கள், புத்துணர்ச்சி பெற்று ஆசீர்வாதம் பெறுங்கள்.

**மனசோர்வு (DEPRESSION):** மன அழுத்தம் அமைதி வேளைக்கு இன்னொரு எதிரி. கவலைகள் தேவனோடு தனித்திருக்கும் நேரத்தை கெடுத்துவிடும். உங்கள் கவலைகளை எல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள் (1 பேதுரு 5:7; சங்.55:22). அமைதி வேளையின் முக்கிய நோக்கமே தேவனை அதிகமாக அறிந்து கொள்ளத்தான். இதை ஒரு சடங்காக செய்யாமல், தேவன் மேல் உங்கள் பக்தியின் வெளிப்பாடாக செய்யுங்கள். அதிகாலையில் வேறுயாருடைய சத்தத்தை கேட்பதற்கு முன் நான் தேவனுடைய மெல்லிய சத்தத்தையே முதலில் கேட்க ஆசைப்படுகிறேன் என்று ஒரு தேவ மனுஷன் சொல்கிறார். ஏன் நாமும் கூட இப்படி செய்யக்கூடாது? அமைதி வேளையைத் தவிர்த்தால் ஆவிக்குரிய வறட்சி வந்து விடும். வளர்ச்சியும் தடைபடும். ஆகவே அமைதி வேளையைத் தவறாமல் கடைபிடிப்போம். தேவன் உங்களை இந்த ஆண்டில் அதிகமாக ஆசீர்வதிப்பார்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

## நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

## ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

---

2024 **ஜனவரி 15,16,17**
(திங்கள், செவ்வாய், புதன்)
**மத்திய வாலிபர் முகாம்**
கேம்ப் சைட், மதுரை

2024 **ஜனவரி 26**
(வெள்ளிக்கிழமை)
**மண்டல உபவாச நாள்**
அந்தந்த மண்டலங்களில்



# இந்தியாவில் ஏ.ஜி ஊழியம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## தென்னிந்திய தேவசங்கம்

கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்ட்ரா, கர்நாடகா ஆகிய ஐந்து மாநிலங்களை உள்ளடக்கியது தென்னிந்திய தேவசங்கம். 1951-ல் பம்பாயில் பதிவு செய்யப்பட்டது. மிஷனரி C.D.ஹாலமேனும் அவருடன் சேர்ந்து சிலரும் அரசாங்கத்தில் பதிவு செய்தனர். தென்னிந்திய தேவசங்கத்தின் பொதுத்தலைவராக இருந்தவர்கள் C.D.ஹாலமேன், A.C.சாமுவேல், விக்டர் ஜோசப், குஞ்சமன், Y.ஜெயராஜ், T.C.ஜார்ஜ், P.S.ராஜமணி, V.T. ஆபிரகாம், தற்போது A.ஆபிரகாம் தாமஸ்.

## கேரளா ஏ.ஜி

இந்தியாவிற்கு வந்த முதல் ஏஜி மிஷனரி மேரி சேப்மேன் 1914ல் கப்பலில் சென்னை வந்து பெங்களூர் அருகிலுள்ள டோட்ட பலாப்பூர் என்ற இடத்திற்கு சென்று தங்கி ஊழியஞ்செய்தார்கள். அவர்கள் இந்தியா வந்தபோது வயது 58. தமிழ்நாட்டில் பல ஊர்களுக்கு சென்று ஊழியஞ்செய்தார்கள். 1921ல் கேரளா சென்று மாவேலிகரை என்ற ஊரில் தங்கி ஊழியஞ்செய்தார்கள். பல சபைகளை நிறுவினார்கள். 1927ல் மரித்து மாவேலிகரையில் அடக்கம்பண்ணப்பட்டார்கள்.

1919ல் ராபர்ட்குக் என்ற மிஷனரி ஏஜி ஐக்கியத்தில் இணைந்து 1929 வரை ஏஜி ஐக்கியத்தில் இருந்தார். பல சபைகளை நிறுவினார். 1926ல் ஜான் பர்ஜஸ் என்ற மிஷனரி மாவேலிகரைக்கு வந்து பெத்தேல் வேதாகம கல்லூரியை ஆரம்பித்தார். 1949ல் பெத்தேல் வேதாகம கல்லூரி புனலூருக்கு மாற்றப்பட்டது. இந்த கல்லூரியில் படித்தவர்கள் கேரளாவிலும், இந்தியாவின் பல பகுதிகளிலும் உலகின் பல பகுதிகளிலும் ஊழியஞ்செய்து வருகின்றனர். 1935-ல் A.C.சாமுவேல் என்ற போதகர் போதக அபிஷேகம் பெற்றார். போதக அபிஷேகம் பெற்ற முதல் இந்தியர் இவர்தான். கேரள ஊழியத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட போதகர் பலர், அவர்களில் குறிப்பிடத்தக்கவர் A.C.சாமுவேல், குஞ்சமன், P.D. ஜான்சன், P.S. பிலிப், T.J. சாமுவேல்.

## மலபார் ஏஜி

கேரளாவின் வடக்கு பகுதியான மலபாரில் கிறிஸ்தவ ஊழியம் அதிகம் இல்லை. இதை உணர்ந்த தலைவர்கள் மலபார் பகுதியை தனி ஏஜி ஊழியமாக பிரித்துவிட்டனர். போதகர் V.T.ஆபிரகாம் தலைமையில் 1997ல் மலபார் ஏஜி உருவாக்கப்பட்டது.

## கேரளா ஏஜி.யின் வெளிநாட்டு ஊழியம்

கேரளாவில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்று வேலை செய்யும் ஏஜி விசுவாசிகள் ஆங்காங்கே கூடி ஏஜி சபையாக செயல்பட்டு வந்தனர். சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள், குவைத், பக்ரைன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் மலையாள ஏஜி சபைகள் உருவாகி கேரளாவோடு இணைந்து ஊழியஞ்செய்து வருகின்றனர்.

## தென் பிராந்திய ஏஜி ஸ்தாபனம்

கேரளா ஏஜியில் ஒரு மண்டலமாக தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டம்

இயங்கி வந்தது. 1981ல் இந்த பகுதி தென் பிராந்திய ஏஜி ஸ்தாபனமாக உருவாகிற்று. C.K.ஜார்ஜ், P.K.வர்கீஸ், செல்லப்பன், ஞானமணி, மோசஸ், சைமன், தேவதாசன் ஆகிய தலைவர்கள் மூலம் இந்த வட்டாரத்தில் சபைகள் வளர்ந்தது.

## தமிழ்நாடு ஏஜி ஊழியம்

திருமதி மேரி சேப்மேன் தான் இந்தியா வந்த முதல் ஏஜி மிஷனரி. இவர்கள் 1914ல் சென்னை துறைமுகத்திற்கு வந்து தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் ஊழியங்களைச் செய்தனர். அப்போது அவர்கள் வயது 58. 1921-ல் கேரளா சென்று ஊழியஞ்செய்தார்கள். 1927ல் மாவேலிகரையில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டார்.

C.S.ஈடி என்ற பிரிட்டிஷ் மிஷனரி சில வருடம் வடஇந்தியாவில் ஊழியஞ்செய்துவிட்டு பெங்களூர் வந்து ஊழியஞ்செய்தார். தமிழ்நாட்டின் தேவைகளை அறிந்து தமிழ்நாட்டில் ஊழியம் செய்ய விரும்பினார். அப்போது சென்னையில் ஊழியஞ்செய்த போதகர் லாமேக்கிடம் தொடர்புகொண்டு அவரை பெங்களூருக்கு அழைத்தார். 1939-ல் இவர்கள் இருவரும் சேர்ந்து கிருஷ்ணகிரி அருகிலுள்ள எட்டு கிராமங்களில் ஊழியம் ஆரம்பித்தனர். இந்த கிராமங்களில் ஓலை செட்டுபோட்டு ஊழியம் ஆரம்பித்தனர். பகலில் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடம் நடத்தினர். மாலையில் நற்செய்தி கூட்டம் நடத்தினர்.

1937ல் கிளாரன்ஸ் மலோனி என்ற மிஷனரியும், அவருடைய மனைவி டாரிஸ் இருவரும் இந்தியா வந்து கேரளாவில் ஊழியஞ்செய்தனர். சில வருடங்கழித்து இவர்கள் அமெரிக்கா போனபோது கிளாரன்ஸ் மரித்துவிட்டார். டாரிஸ் அம்மா விதவை என்ற நிலையில் அமெரிக்காவில் ஊழியத்தை தொடர்ந்தார். 1946-ல் ராபர்ட் எட்வர்ட்ஸ் என்பவரை திருமணம் செய்து இந்தியா வந்து ஊழியஞ்செய்தனர். 1948-ல் செங்கோட்டைக்கு வந்து அருகிலுள்ள கணக்கபிள்ளைவலசை என்கிற கிராமத்தில் தங்கி ஊழியத்தை ஆரம்பித்தனர். 1949 ஜுலை மாதம் 3ம் தேதி இந்த ஊரில் கட்டின ஆலயத்தை பிரதிஷ்டை செய்தனர். இதுவே தமிழ்நாட்டின் முதல் ஏஜி ஆலயம். 1948-ல் ஆலிவர் போத் என்ற மிஷனரி மதுரையில் தமிழ்நாடு வேதகாம கல்லூரியை ஆரம்பித்தார். பாஸ்டர் Y.ஜெயராஜ், ஆண்ட்ரூஸ், P.S.ஆதாம்துரை ஆகியோர் இந்த மிஷனரிகளுடன் இணைந்து ஊழியஞ்செய்தனர். பிந்திய நாட்களில் P.S.ராஜமணி, C.சகரியா, D.மோகன், A.ஆபிரகாம் தாமஸ் போன்ற தலைவர்கள் எழும்பினார்கள். அறுவடையின் பத்தாண்டு (1991-2000) திட்டத்தின் மூலம் ஏராளமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

## மகாராஷ்ட்ரா ஏஜி

1917-ல் இங்கிலாந்திலிருந்து போதகர் தாமஸ் ஸ்டோடார்ட் என்பவர் மகாராஷ்ட்ராவிற்கு வந்து புனே பட்டணத்தில் ஊழியம் செய்தார். 1926ல் ஆஸ்திரேலியாவிலிருந்து போதகர் தாமஸ் ஈவன்ஸ் என்பவர் புனே வந்து ஊழியம் செய்தார். 1934-ல் போதகர் சி.டி.ஹாலமன் என்பவர் அமெரிக்காவிலிருந்து வந்து ஊழியம் செய்தார். 1936-ல் போதகர் டெட்வாசர் என்பவரும் அமெரிக்காவிலிருந்து வந்து புனேயில் ஊழியம் செய்தார். 1927-ல் ஜுனர் என்ற ஊரில் சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. 1952-ல் சார்லஸ் ஆண்டர்சன் தம்பதிகள் வந்து ஊழியம் செய்தனர். அவருடன், அவருடைய சகோதரர் ஜிம் ஆண்டர்சன் தம்பதியும் வந்து ஊழியம் செய்தனர். போதகர் சாமி போர்டே, சரத் போர்டே என்ற தலைவர்களும் ஊழியம் செய்தனர்.

## மகாராஷ்ட்ராவில் மலையாள ஊழியம்

போதகர் எம்.தாமஸ் தலைமையில் மகாராஷ்ட்ராவிலிருந்த மலையாள சபைகள் இணைந்து ஓர் ஐக்கியமாக செயல்பட ஆரம்பித்தன.

## கர்நாடகா ஏஜி

ஆரம்ப நாட்களில் பெங்களூரில் போதகர் ஜார்ஸ் பெர்க், ராபர்ட் குக் ஆகியோர் ஊழியம் செய்தனர். பின்பு திருமதி மேரி சேப்மன் கொஞ்ச காலம் ஊழியம் செய்தார். பின் சி.எஸ். ஈ.டி என்ற பிரிட்டிஷ் மிஷனரி ஊழியம் செய்தார். 1951-ல் சிசில்குட் என்ற அமெரிக்க மிஷனரி பெங்களூரில் ஓர் இடம் வாங்கி ஊழியம் செய்தார். அந்த இடத்தில் தான் பிந்திய நாட்களில் தென்னிந்திய வேதாகம கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பல மிஷனரிகள் வந்து கர்நாடகாவில் சபைகளை ஸ்தாபித்தனர். பிந்திய நாட்களில் இந்திய தலைவர்களான போதகர் ஜான் தானிக்கல், டி.சி. ஜார்ஜ் தலைமையில் ஊழியம் வளர்ந்தது.

## ஆந்திராவில் ஏஜி ஊழியம்

கர்நாடகாவின் கிளை ஊழியமாக ஆந்திராவில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. போதகர் ஜான் தானிக்கலும் மிஷனரி வைகிள்-ம் ஆந்திரா சென்று வந்து கூட்டங்கள் நடத்தினர். சபை ஆரம்பமானது. ஆந்திராவை சேர்ந்த இஸ்ரேல் என்ற வாலிபர் தென்னிந்திய வேதாகம கல்லூரியில் படித்து முடித்து ஆந்திரா ஊழியத்திற்கு உதவினார். பல சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. பின்பு. போதகர் பீட்டர் கீரா என்பவர் மூலமாக பல சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. போதகர் டி.சி. ஜார்ஜ் தலைமையில் ஆந்திரா ஊழியம் வளர்ந்தது. பிந்திய நாட்களில் மிஷனரி ஏர்ல் ஸ்டப்ல் என்பவரால் ஆந்திரா ஊழியம் வளர்ந்து பெருகிற்று.

## வடஇந்திய ஏஜி

வடஇந்தியா என்பது ஓர் பரந்து விரிந்த பகுதி. பல மாநிலங்களில் பல நாட்டு மிஷனரிகள் ஊழியம் செய்து வந்தனர். ஆரம்ப நாட்களில் வில்லியம் கேரி கல்கத்தா வந்து (1793-1834) தங்கி ஊழியம் செய்தார். பிந்திய நாட்களில் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சலஸ் என்ற இடத்தில் நடந்த எழுப்புதலில் பங்குபெற்ற சிலர் இந்தியா வந்து ஊழியம் செய்தனர். சுயாதீன ஊழியம் செய்த மிஷனரிகள் பலர் ஏஜி ஸ்தாபனத்திலும் இணைந்தனர். 1918ல் சகரான்பூர் என்ற இடத்தில் ஓர் மிஷனரி கன்வென்ஷன் நடத்தப்பட்டது. இந்தியா ஏஜி ஊழியம் என்ற பெயரில் அவர்கள் ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். அமெரிக்க மிஷனரி சி.ஹெஜ் ஸ்டன் மேக்கா என்பவர் தலைமையில் ஏஜி ஊழியம் ஆரம்பமானது. பல மாநிலங்களில் ஏஜி ஊழியம் அந்தந்த வட்டார நிலைமைக்கு ஏற்ப பள்ளிக்கூடங்கள், அநாதை விடுதிகள் ஆரம்பித்தன. இன்று எல்லா மாநிலங்களிலும் ஏஜி ஊழியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு இந்தியாவில் ஏஜி ஊழியம்

வடகிழக்கு மாநிலங்கள் ஏழு. இந்த மாநிலங்களில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். 1880 முதல் பல வெளிநாட்டு மிஷனரிகள் இந்த மாநிலங்களில் ஊழியம் செய்தனர். பேப்டிஸ்ட் மிஷனரிகள் குறிப்பிடத்தக்கவர்கள். 1950-ல் அமெரிக்க ஏஜி போதகர்கள் சிலர் இங்கு வந்து ஊழியம் செய்தனர். கல்கத்தாவிலிருந்த மார்க் பண்டைன் என்ற மிஷனரியும் பலதடவை இங்கு வந்து ஊழியம் செய்தார். மகராஷ்ட்டிரா மாநிலத்தை சேர்ந்த போதகர் சாலமன் வாஸ்கர் 1960-ல் நாகலாந்து வந்து ஏஜி ஊழியத்தை ஆரம்பித்தார். 1963-ல் மணிப்பூரில் ஊழியம் ஆரம்பித்தார். இன்று எல்லா மாநிலங்களிலும் ஏஜி ஊழியம் நடைபெற்று வருகிறது. 612 பேரை கொலை செய்த ஓசேன் இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெற்று 1994ல் ஏஜி ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆச்சரியமான தேவ கிருபை


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும், இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணும்படி இவ்வுலகில் வந்த நம் இரட்சகர், நமக்கு அதிகமான கிருபைகளை அளிக்கிறார் (யாக்கோபு 4:6). கிருபை என்பது தகுதியில்லாத நமக்கு தேவன் பாராட்டும் தயவாகும். வேதாகமம் முழுவதிலும் "கிருபை" என்ற வார்த்தை 185 தடவைகள் வருகிறது. வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம் 6:8ஆம் வசனத்தில், கிருபை என்ற வார்த்தை முதல் தடவையாக ஆரம்பமாகி, கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷம் 22:21ம் வசனத்தில் கிருபை என்ற வார்த்தையுடனும் முடிவடைகிறது.

கிருபையைக் குறித்து சில வாக்குத்தத்தங்களைப் பார்ப்போம். "கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது" (சங்.103:17). நாம், நமக்குப் பிரியமாய் வாழாமல், கர்த்தருக்கு பயந்து வாழும்போது, அவருடைய நித்தியமான கிருபை தலைமுறை தலைமுறையாக நம்மைத் தாங்கும். "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும் ...இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.54:10). உறுதியாக அசையாமல் நிற்கக்கூடிய மலைகளும், பர்வதங்களும் விலகிப்போனாலும், அவருடைய கிருபை நம்மை விட்டு விலகிப்போகாது. ஏனென்றால் அவர் நம்மேல் மனதுருகுகிற கர்த்தர்.

வேதாகமத்தில், கிருபைப்பெற்று வாழ்ந்த தேவ பிள்ளைகள் அநேகர் இருந்திருக்கின்றனர். அவர்களுக்குள் ஒருவரான, **இயேசுவின் தாயாகிய மரியாளைக்** குறித்து நாம் இங்கேப் பார்ப்போம். அவள் வாழ்ந்த நாசரேத், சுமார் 15 குடும்பங்கள் கொண்ட ஒரு சிற்றூர். அவள் வாழ்ந்த சிறிய வீட்டில் தேவதூதன் பிரவேசித்து, "கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்" என்று வாழ்த்துகிறான். அவள் திகைக்கும்போது, மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் என்றான் (லூக்கா 1:28,30). அவள் தேவனிடத்தில் கிருபை பெற்றாள். கர்த்தர் அவளுடனே இருந்தார், நீங்களும் ஒரு எளிய பின்னணி கொண்டவர்களாக இருக்கலாம். மற்றவர்களின் மரியாதையைப் பெறாதவர்களாக இருக்கலாம். ஆனால் தேவனுடைய கிருபையைப் பெற்றவர்களாக இருக்கும்போது, கர்த்தர் உங்களுடனே இருப்பார். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்பீர்கள். அவள், இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள் (லூக்கா 1:38). அவள் கிருபை பெற்றவளாக இருந்தபடியினால், தனக்கு ஏற்படப்போகும் நிந்தையையும், அவமானத்தையும் பொருட்படுத்தாமல், தேவனுக்குத் தன்னை அடிமையாக்கி, அவருடைய வார்த்தை நிறைவேறுவதற்கு இடமளித்தாள். அவர் தம்முடைய அடிமையை நோக்கிப் பார்த்தார். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது; என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது

என்றாள் (லூக்கா 1:46-49). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக என்று எபேசியர் 6:24ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். எதிர்மறையான சூழ்நிலைகளின் மத்தியிலும் ஆண்டவரை குறைகூறாமல் நேசிக்கும் நேசம்தான், அழியாத அன்பு! மரியாள் இப்படி அன்புகூர்ந்ததினால், கிருபை பெற்றாள். நாமும், "ஆண்டவர் எனக்கு செவிகொடுக்கவில்லை, எனக்கு தூரமாயிருக்கிறார்" என்றெல்லாம் அவிசுவாசமாகப் பேசாமல், பாடுகளிலும், வியாதியிலும், நிந்தையிலும், அவமானத்திலும், குறைவுகளிலும், ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைகளிலும், அவரிடத்தில் தீராத, அழியாத அன்பு கொண்டிருப்போமானால், கிருபையை பெற்றுக்கொள்வோம்.

கிருபையினால் விடுதலையாக்கப்பட்ட ஒரு பெண்மணியைக் குறித்து இங்கே பார்ப்போம் (யோவான் 8:1-9). இயேசு, இரவெல்லாம் ஒலிவமலையில் ஜெபித்து விட்டு, மறுநாள் காலையிலே தேவாலயத்திற்கு திரும்பி வந்தபோது, திரளான ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். அவர் அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்திற்கு கொண்டு வந்தார்கள். அவளோடு பாவம்செய்த அந்த நபரை விட்டுவிட்டு, அந்த பெண்ணை மட்டும் அழைத்து வந்து, அவர் எப்படி பதிலளித்தாலும், அவரைக் குற்றப்படுத்தி விடலாம் என்று காத்திருந்தனர். இயேசு பிதாவை நோக்கி ஜெபம் பண்ணியிருந்திருப்பார். நாமும் செய்வதறியாத சூழ்நிலை வரும்போது ஆண்டவரை நோக்கி ஜெபிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். பிதாவின் ஆலோசனைப்படி, இயேசு குனிந்து விரலினால் தரையிலே எழுதினார். ஒருவேளை அங்கு கற்களோடு கூடிவந்திருந்த எல்லாருடைய பாவங்களையும் அவர் எழுதியிருந்திருப்பார். விரல்களினாலே நியாயப்பிரமாணமாகிய சட்டத்தை எழுதிய தேவன், கிருபையாக மாறி இயேசுவாக வந்து, குற்றஞ்சாட்டுகிறவர்களின் பாவங்களை தரையிலே விரலினால் எழுதுகிறார். பெரியோர் முதல் சிறியோர் வரை மனசாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு ஒவ்வொருவராய் போய்விட்டார்கள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனி பாவஞ்செய்யாதே என்றார். இதுதான் அளவற்ற கிருபை. ஒரு பெண்ணை அசிங்கப்படுத்தி கேவலப்படுத்த முயன்ற கூட்டத்தின் முன்பு ஆண்டவர் அவளை மன்னித்து, பாவத்திலிருந்து மீட்டு, கொலைக்கு பாத்திரவாட்டியான அவளுக்கு விடுதலை அளித்தார். நாமும், நம் குற்றம் தெரிந்து விட்டது அல்லது நம்மை குறித்து அவதூறு பரப்புகிறார்களே என்றும், இனி நமக்கு விமோசனமோ, வாழ்வோ இல்லையென்றும் துக்கித்துக் கொண்டிருப்போமானால், கிருபையும் இரக்கமும் நிறைந்த தெய்வக் குமாரனாகிய இயேசு நம்மை மன்னித்து, மீட்டு, வாழ்வளிப்பார்.

அடுத்து செய்ய வேண்டிய வேலையை செய்ய, கிருபை எவ்வாறு பலமளிக்கிறது (Enabling Power) என்பதைக் குறித்துப் பார்ப்போம் (சக.4:6-10). இங்கு, தேவாலயம் கட்டப்பட்டு முடிவு பெறாமல் இருந்த சூழலில், கர்த்தருடைய தூதனானவர், 'பெரிய பர்வதம் செருபாபேலுக்கு முன்பாக சமபூமியாகும். தலைக்கல்லை அவன் கொண்டு வருவான். ''கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக" என்று ஜனங்கள் ஆர்ப்பரிக்க வேண்டும்' என்று கூறுகிறார். அப்பொழுது, செருபாபேலின் கைகளால் அஸ்திபாரம் போடப்பட்டு, முடிவு பெறாமலிருந்த தேவாலயத்திற்கு, செருபாபேலின் கைகளே அதை முடித்துத் தீர்க்கும் என்று உண்டான கர்த்தருடைய வார்த்தையைக் குறித்துப் பார்க்கிறோம். இதுதான் செய்யவேண்டிய வேலைகளை செய்து முடிக்க அளிக்கப்படும் 'பலமளிக்கும் கிருபை' ஆகும்.

நம் வாழ்விலும் ஆரம்பித்து முடிவுபெறாமல் இருக்கும் காரியங்கள், அற்பமான ஆரம்பங்கள் எல்லாம் 'கிருபையுண்டாவதாக கிருபையுண்டாவதாக' என்றும் நாம் ஆர்ப்பரிக்கும்போது, முடிவு பெறுவதை நாம் பார்க்க முடியும். பெரிய பர்வதம் போன்ற அசைக்க முடியாத பிரச்சனைகளும் நமக்கு முன்பாக தகர்ந்து சம பூமியாகிவிடும். பொதுவாக கட்டிடம் முடிந்த பின்புதான் தலைக்கல்லைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்வார்கள். ஆனால் இங்கு தலைக்கல்லைக் கொண்டுவந்து ஆர்ப்பரித்தபோது, தேவாலயம் நிறைவடைகிறது. நாமும் தலைக்கல்லாகிய இயேசுவை, நம் தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய வாழ்வின் பிரச்சனைகள், வியாதிகள், தொழில், வேலை, பிள்ளைகளின் திருமணம், படிப்பு ஆகியவற்றின்முன் கொண்டு வந்து ''கிருபை உண்டாவதாக'' என்று ஆர்ப்பரிக்கும்போது, தடைகள் எல்லாம் தகர்க்கப்பட்டு, காரியங்கள் ஆசீர்வாதமாய் முடியும்.

இந்த புதிய வருடத்தில், கிருபையாக மாறி நம்மோடு வாசம் செய்த தலைக்கல்லாகிய இயேசு கிறிஸ்து, உங்களுக்கு சகலவிதமான கிருபைகளையும் அளித்து வெற்றியுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ கிருபை அருள்வாராக!

## உங்கள் வீட்டு டி.வி. தேவனுக்குப் பிரியமானதா? சோதித்துப் பாருங்கள்!

1. நீங்கள் குடும்ப அங்கத்தினருடன் நேரம் செலவழிப்பதைக் காட்டிலும் டி.வி. முன்னால் அதிக நேரம் செலவழிக்கிறீர்களா?
2. நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு நாளில் ஒரு மணி நேரத்திற்கு மேல் டி.வி. பார்க்கிறீர்களா?
3. உங்கள் வீட்டில் எப்பொழுது டி.வி. பார்க்க வேண்டும் என்ற விதிமுறைகள் உண்டா? (உதாரணமாக : பள்ளி செல்லும் முன்னால் பார்க்கக் கூடாது. இரவு 10 மணிக்கு மேல் கூடாது. வீட்டுப் பாடம் முடிக்கும் முன் கூடாது.)
4. உங்கள் குடும்பத்தோடு உள்ள ஐக்கிய நேரம் பறிபோகும் வகையில், சாப்பிடும் நேரங்களில் டி.வி. பார்க்கிறீர்களா?
5. உங்கள் பிள்ளைகள் எந்நெந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்று கவனிக்கிறீர்களா?
6. உங்களைத் தொந்தரவு செய்வதைத் தவிர்ப்பதற்கு உங்கள் பிள்ளைகள் டி.வி.யில் எதையாவது பார்க்கட்டும் என்று அனுமதிக்கிறீர்களா?
7. உங்கள் பிள்ளைகளோடு டி.வி. நிகழ்ச்சிகளைக் கலந்து ஆலோசிக்கிறீர்களா?
8. உங்கள் வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போது அவர்களோடு தரமான நேரம் செலவழிப்பதற்குப் பதிலாக அவர்களோடு சேர்ந்து டி.வி. பார்க்கிறீர்களா?
9. சண்டை, ஆபாசம், அசுத்தம் மற்றும் நல்லொழுக்கமற்ற காரியங்களைப் பார்க்கிறீர்களா?
10. நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அடிமைகளாயிருக்கிறீர்களா?

### மதிப்பீடு

- ஒவ்வொரு கேள்விக்கும் ஆம் அல்லது இல்லை என்று உண்மையாகப் பதில் கூறுங்கள்.
- 3,5,7,கேள்விகள் தவிர மற்ற எல்லா கேள்விக்கும் இல்லை என்று பதில் அளித்திருப்பீர்களாகில் உங்கள் பழக்கம் ஆரோக்கியமானது. அப்படி இல்லையென்றால், நீங்கள் தேவ சமூகத்தில் உட்கார்ந்து மன்னிப்பு கேட்டு உங்கள் பழக்கத்தை மாற்ற வேண்டும். இல்லயேல், பிசாசுக்கு இடம் கொடுக்கிறவர்களாயிருப்பீர்கள் எபேசியர் 4: 27).



# நீதிமொழிகள் : Proverbs

## புத்தக அறிமுகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

### ஞான இலக்கியங்களும் செய்யுள் ஆகமங்களும்

பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புத்தகங்களும் மூலமொழியிலுள்ள எபிரெய வேதாகமத்தில் மூன்று பிரிவாகப் பகுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை, **நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசிகள், பரிசுத்த எழுத்துக்கள்** என அறியப்பட்டன. யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய ஐந்து புத்தகங்களும் இதிலுள்ள மூன்றாவது பிரிவைச் சார்ந்தவையாகும். இவை **"ஞான இலக்கியங்கள்"** எனவும் அழைக்கப்பட்டன. இவை எபிரெய மொழியில் செய்யுள் நடையில் எழுதப்பட்டிருந்ததால் **"செய்யுள் ஆகமங்கள்"** என்றும் பெயர் பெற்றன.

### பழமொழிகளும், நீதிமொழிகளும்

இஸ்ரவேலர் வாழ்ந்துவந்த கிழக்கத்திய நாடுகளில் ஆழமான அர்த்தம் கொண்ட இரத்தினச்சுருக்கமான சொற்றொடர்கள் ஏராளம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப் பட்டன. அவை இஸ்ரவேலராலும் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு மொழியிலும், கலாச்சாரத்திலும் பயன்படுத்தும் இவ்வித சொற்றொடர்களை **'பழமொழிகள்'** என அழைக்கிறோம். தீத்து 1:12-ல் பவுல் 'கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர் துஷ்ட மிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்ற அவ்விடத்துப் பழமொழிகளில் ஒன்றைப் பயன்படுத்துகிறார்.

ஆனால் வேதாகமத்தில் காணப்படும் **"நீதிமொழிகள்"** அன்றாடகப் பழமொழியிலிருந்து பெரிதும் வேறுபட்டவை. **"நீதிமொழிகள்"** கடவுளோடுள்ள உறவை அடிப்படையாகக் கொண்டவை. சிருஷ்டி கர்த்தராகிய தேவன் ஒருவர் உண்டென்றும் அவருக்கு மனுமக்கள் பயப்படவேண்டுமென்றும் அதன்மூலம் வெற்றிபெற முடியும் என்பதே நீதிமொழிகள் போதிப்பவை. இந்த சிருஷ்டி கர்த்தர் ஏற்படுத்திய ஒழுக்கவிதிகள் உண்டெனவும் நீதிமொழிகள் உறுதிப்படக் கூறின. நியாயத்தீர்ப்பு செய்கிற தேவன் உண்டெனவும், அவர் நியாயந்தீர்க்கும்போது நீதிமான்கள் ஆசீர்வதிக்கப்படுவதும், துன்மார்க்கர் ஆக்கினை அடைவதும் உறுதி என்பதே நீதிமொழிகள் சொல்லும் சத்தியமாகும். எனவே, சாதாரணப் பழமொழியிலிருந்து நீதிமொழிகள் மாறுபட்டவை என்று அறியலாம்.

### நீதிமொழிகளின் ஆசிரியர்கள்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் **ஆசாரியர், தீர்க்கதரிசிகள், ஞானிகள் அல்லது ஞான திருஷ்டிக்காரர்கள்** என்ற மூன்று வகை ஊழியரும் காணப்பட்டனர். இந்த ஞானிகள் அல்லது ஞானதிருஷ்டிக்காரர்களே ஞானஇலக்கியங்களில் பெரும்பகுதியை எழுதினர் என்று நம்பப்படுகிறது. இவர்கள் தெய்வீக ஞானம் கொண்டோராயும், அரசியல் அறிவுடையோராயும், வாழ்க்கை சம்மந்தப்பட்டப் பிரச்சனைகளுக்கு ஆலோசனைதரும் திறம்படைத்தோராயும் காணப்பட்டனர் (நீதி.22:17-24:34). சாலமோன் மன்னன் இவ்வித ஞானமுடையவனாய் இருந்தான் என்று 1இராஜாக்கள் 4:22-33ல் வாசிக்கிறோம். அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்.

அத்துடன் அவன் மரங்கள், பூண்டுகள், தாவரங்கள், மிருகங்கள், ஊரும் பிராணிகள், மச்சங்கள் ஆகியவை பற்றியும் வாக்கியங்களைச் சொன்னதாக வாசிக்கிறோம்,

(10:1;25:1). 'நீதிமொழிகள்' புத்தகம் முழுவதிலும் இதன் ஆதாரங்களை நம்மால் காண இயலும். எனவே ஞானிகள் மற்றும் சாலமோனைத் தவிர,

- எசேக்கியா ராஜாவின் மனிதர்கள், (நீதி.25-29),
- யாக்கேயின் குமாரனாகிய ஆகூர் (நீதி.30),
- ராஜாத்தியாகிய லேமுவேல் அரசனின் தாய் (நீதி.31) ஆகியோரும் சில பகுதிகளை எழுதியுள்ளனர்.

## நீதிமொழிகள் புத்தகம் எழுதப்பட்ட நோக்கம்:

**நீதிமொழிகள் 1:2-6** வசனங்கள் இப்புத்தகம் எழுதப்பட்ட நோக்கத்தைத் தருகிறது:

1:2 இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து, புத்திமதிகளை உணர்ந்து,

1:3 விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப் பற்றிய உபதேசத்தை அடையலாம்.

1:4 இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும்.

1:5 புத்திமான் இவைகளைக்கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து,

1:6 நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்.

## நீதிமொழி புத்தகத்தின் பொருளடக்கம்:

- **நீதிமொழிகள் 1-9** வரையுள்ள அதிகாரங்கள் ஞானம் தரும் நன்மைகளை செய்யுள் நடையில் விவரிக்கின்றன. இங்கு ஞானம் ஒரு பெண்ணாக உருவகிக்கப்பட்டு அவள் போதனைகளைத் தருகிறாள். நல்வழிகளைவிட்டு, வழிதப்பி, வேசியைத் தேடிச்செல்லும் வாலிபனுக்கு ஞானத்தாயாக இருந்து தரும் நல்ஆலோசனைகள் இன்றும் வாலிபர்களுக்கு எச்சரிக்கையாய் அமைந்துள்ளது, (7:7-23). ஞானத்தின் மேன்மை (நீதி.1-4), மதியீனத்தின் குறைபாடுகள் (நீதி.5-7), ஞானம் விடுக்கும் அழைப்பு (நீதி.8-9) ஆகியவற்றை இப்பிரிவில் பகுத்துப்படிக்கலாம்.
- **நீதிமொழிகள்10-18** வரையுள்ள அதிகாரங்களில் ஞானத்துக்கும் மூடத்தனத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக் காண்கிறோம்.
- **நீதிமொழிகள் 19-24** வரையுள்ள அதிகாரங்களில் வாழ்க்கையில் நாம் பின்பற்றவேண்டிய கொள்கைகள் (Life Principles) தரப்பட்டுள்ளன. இவை **இருவரிப் போதனைகளாய்** அமைந்துள்ளன.
- **நீதிமொழிகள் 25-29** வரையுள்ள அதிகாரங்களில் துன்மார்க்கம், நீதி ஆகியவைகளிடையேயுள்ள வேற்றுமைகள் பற்றிய ஆலோசனைகளைக் காண்கிறோம்.
- **நீதிமொழிகள் 30-31** அதிகாரங்களில் வெவ்வேறு தலைப்புகளில் பல்வேறு ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

## நீதிமொழிகளில் முக்கியத் தலைப்புகள்

தலைப்புவாரியாக நீதிமொழிகளைப் படிப்பதே மிகச்சிறந்த முறையாகும். நீதிமொழிகளில் காணக்கிடைக்கும் மிகச்சிறந்த தலைப்புகள் பலவற்றை இங்கே பட்டியலிடுவோம்

- **ஞானிகள்**
  - ஞானிகள் ஞானமுள்ள போதனைகளுக்குச் செவிகொடுக்கின்றனர் (1:5).

- ஞானிகள் கர்த்தருக்குப் பயப்படுவர் (1:7).
- ஞானிகள் ஞானிகளுடன் இணைந்திருப்பர் (13:20).
- ஞானிகள் தாங்கள் பெற்றதைப் பாதுகாப்பர், பயன்படுத்தவும் செய்வர் (10:14).
- ஞானிகள் தங்கள் வார்த்தைகளை அளந்து பேசுவர் (16:23).
- ஞானிகள் தங்கள் வேலையில் ஜாக்கிரதையாயிருப்பர் (10:4).
- ஞானிகள் ஆத்தும ஆதாயம் செய்வதில் சிறந்திருப்பர் (11:30).

- **துன்மார்க்கர்**

ஞானிகளின் சுபாவத்துக்கும், செயல்பாடுகளுக்கும் நேர் எதிரிடையானவர்களே துன்மார்க்கர். துன்மார்க்கரின் சுபாவங்கள் மற்றும் நடவடிக்கைகளை நீதிமொழிகள் 6:12-19 வசனங்கள் தொகுத்துத் தருகின்றன. இந்த வேதபகுதியிலுள்ள அவர்களது பாவங்களை பட்டியலிடலாம்: பெருமை; பொய் பேசும் நாவு; கொலை; துராலோசனையை சிந்தித்துச் செயல்படும் இருதயம்; தீங்கு செய்ய விரைந்தோடுங்கால்; பொய்சாட்சி சொல்லுதல்; சகோதரருக்குள்ளே விவாதத்தை உண்டுபண்ணுதல் போன்ற அனைத்தையுமே கர்த்தர் வெறுக்கிறார்; அவை ஆண்டவர் பார்வையில் அருவருப்பானவையே!

- **பேதைகள், பரியாசக்காரர், மூடர்**

பேதைகள் விவேகிகளுக்கு எதிர்பதமானவர்கள். பேதை எதையும் நம்புவான்; விவேகியோ தன் நடையில் கவனமாயிருப்பான்,(14:15). பேதைகள் கர்த்தருடைய வார்த்தையை நம்பமாட்டார்கள். பேதையானவனே வேசியின் கண்ணியில் விழுவான், (7:7-23). நாம் பல காரியங்களில் அறிவில்லாத பேதைகளாயிருந்தாலும் கர்த்தரிடத்திலிருந்து கற்றுத் தேறுகிறோம். பேதைகள் அப்படிக் கற்றுக்கொள்வதில்லை. பரியாசக்காரன் தனக்கு எல்லாம் தெரியும் என நினைப்பவன், (21:24) ஞானத்தைத் தேடார்கள். கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், (9:7,8) மனிதருக்கும் தேவனுக்கும் அவர்கள் அருவருப்பானவர்கள் (24:9).

**மூடர்கள்:**

**நீதிமொழிகள் மூன்றுவித மூடர்களைப் பற்றிக் கூறுகிறது**

- பிடிவாதம் பிடிக்கும் மூடன்.
- அறநெறித் தீமைகள் நிறைந்து ஒழுக்கக்கேடாய் நடக்கும் மூடன்.
- நாபாலைப்போன்று மிருகத்தன்மையுடைய மூடன்.

இந்த மூடர்கள் கர்த்தருடைய வார்த்தையிலிருந்துக் கற்றுக்கொள்ளமாட்டார்கள். தங்கள் பேசும் வார்த்தைகளில் கட்டுப்பாட்டுடன் இருக்கமாட்டார்கள். முற்கோபிகளாயிருப்பர் (12:6). சுயக்கட்டுப்பாடுடன் இருக்கமாட்டார்கள், (12:16). மூடன் தான் சொல்லுவதே சரியென சாதிப்பான் (26:12). தன் மூடத்தனத்தினால் தன்னைப் பெற்றவர்களுக்கு சஞ்சலமாயிருப்பான், (10:1). தனது செல்வத்தைச் சரியாய் பயன்படுத்த அறியாதவன், (21:20). எந்தப் பொறுப்பையும் உத்தரவாதத்துடன் மூடனிடம் ஒப்படைக்க முடியாது (26:1-12).

மேற்கண்ட தலைப்புகளைப்போல **செல்வந்தர், ஏழைகள், பிச்சைஎடுப்பவன், திருடன்** எனப் பல்வேறு தலைப்புகளையும் நீதிமொழிகள் முழுவதிலும் காண்கிறோம்.

**அன்றாட அனுபவங்களில் நீதிமொழிகள் கற்றுத்தரும் முத்தான சத்தியங்கள்:**

**30:15-16**

மனிதனுடைய இரத்தத்தை அவர்களுடைய அனுமதியின்றி உறிஞ்சிக்குடிக்கும் அட்டைகள், திருப்திப்படுத்தவே முடியாத பாதாளம், மலட்டுக்கர்ப்பம், தண்ணீரை உறிஞ்சும் வறண்ட வெட்டாந்தரை, அனைத்தையும் அவித்திடும் அக்கினி ஆகியவற்றைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவும், அவைகளில ஒன்றைப்போல நாம் இருக்கக்கூடாது என்றும் 30:15-16-ல் பார்க்கிறோம்.

**30:17**

யாத்திராகமம் 20:12, உபாகமம் 5:16 மற்றும் எபேசியர் 6:1-3 வேதபகுதிகளில் **''பெற்றோரை கனம்பண்ண வேண்டும்''** என்பது நமக்குக் கட்டளையாகத் தரப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கட்டளைக்குக் கீழ்படியாவிட்டால் காகங்கள் கண்களைப் பிடுங்கும் என்பதும் கழுகின் குஞ்சுகளுக்கு இரையாவீர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கும் நீதிமொழிகளிலுள்ள இந்த வசனம் பயத்தோடும் நடுக்கத்தோடும் கட்டளைக்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுக்கவைக்கும் முத்தான வசனமாகும்.

**30:18-20**

கழுகு, பாம்பு, கப்பல் ஆகியவற்றின் வழிகளை நாம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர இயலாது. அப்படியே விபச்சார ஸ்திரீயினுடைய நடவடிக்கைகளையும் நாம் நிதானிக்க இயலாது என்பது எத்தனை உண்மை!

- பூமியில் கொடுமைசெய்யும் நான்குபேர் அந்தந்த ஸ்தானங்களுக்குத் தகுதி படைத்தவர்களல்லவாம்!
- தகுதியில்லாத ஒருவன் உயரிய இடத்தில் தலைவனாய் அமர்த்தப்படுதல் தவறு.
- தின்று கொளுத்து அடாவடித்தனத்தில் ஈடுபடும் அறிவிலி ஒருவனுக்கு வயிறார உணவு கொடுப்பதும் தவறு.
- எப்போதும் சண்டையிட்டு தன் புருஷனுடைய சமாதானத்தைக் கெடுக்கும் ஒரு பெண்ணைத் திரும்பத்திரும்ப சமாதானம்பண்ணி அவளது புருஷனுடன் சேர்ந்து வாழ வற்புறுத்துவதும் நன்மை பயக்காது.
- ஒருவனுக்கு அவனுடைய வேலைக்காரி அவன் மனைவிக்குப் பதிலாக வாழ்க்கைப்படுவதும் பூமியை சஞ்சலத்துக்குள்ளாக்கி தாங்கமுடியாத கொடுமைகளுக்கு வழிவகை செய்யும் போன்ற சத்தியங்கள்; நாம் கற்றுக்கொள்ளவும், மீண்டும் அவ்விதத் தவறுகளைச் செய்யாமலிருக்கவும் நமக்கு அறிவுரை தருகின்றன வல்லவோ!

**30:24-28**

எறும்புகளும், குழிமுசல்களும், வெட்டுக்கிளிகளும், சிலந்திப்பூச்சிகளும் நமக்குக் கற்றுத்தரும் பாடங்கள் ஏராளம்:

- சின்னவனாயிருந்தாலும் ஞானமுள்ளவனாயிரு.
- வாழ்க்கையில் எதிர்காலத்துக்கென சேர்த்துவை.
- நீ சத்துவமற்றவனாயிருப்பினும் பாதுகாப்பான இடத்தில் குடியிரு.
- உன் சமுதாயத்தில் ஒற்றுமையுடன் வாழக் கற்றுக்கொள்.
- உன் திறமையை மட்டுப்படுத்தாதே.
- ராஜ அரண்மனையிலும் உனக்குக் குடியுரிமைக் கிடைக்கும்.

என்னென்ன அருமையான சத்தியங்கள் இவை!

**30:29-31**

- சிங்கத்தைப்போல பராக்கிரமுள்ளவனாயிரு.
- போர்க்குதிரையைப்போலவும் வெள்ளாட்டுக்கடாவைப்போலவும், வெற்றி நடைபோடு.
- சேவலைப்போல (ராஜா என வசனத்தில் தரப்பட்டுள்ளது) நினைத்ததை நடத்திக்காட்டு; இவையனைத்தும் அருமையிலும் அருமையான சத்தியமன்றோ!

**அகர வரிசையில் ஆலோசனைகள்:**

மேற்கூறப்பட்டவை தவிர தமிழில் அகரவரிசையில் ஞாபகத்தில் வைப்பதற்கு வசதியாக நாம் செய்யுள் எழுதுவதுபோல (அம்மா இங்கே வாவா; ஆசைமுத்தம் தாதா;இலையில் சோறுபோட்டு; ஈயைத் தூர ஓட்டு),

எபிரெய மொழியிலுள்ள 22 எழுத்துக்களையும் முதல் எழுத்திலிருந்து ஆரம்பித்து எழுதப்பட்டுள்ள அகரவரிசையான வசனங்களும் படிப்போருக்கு பயன் தருவதாக அமைந்துள்ளன, (எபிரெய மொழி தெரிந்தோர் இதனை ஆர்வமுடன் படிக்க இயலும்).

**நீதிமொழிகள் 31:10-31**ல் வரும் குணசாலியான ஸ்திரீயைப்பற்றிய விபரங்கள் அகரவரிசையிலேயே தரப்பட்டுள்ளன.

இலட்சியப்பெண்ணாகச் சித்தரிக்கப்பட்டுள்ள அவளிடமிருந்த பத்து குணலட்சணங்களை இந்த வேதபகுதியில் தரப்பட்டுள்ளன.

- நற்குணம் நிறைந்த குணசாலி, (வச.10).
- கடினமாய் உழைப்பவள், (வச 13-22,24).
- தாராளமாய்க் கொடுப்பவள், (வச 20).
- குடும்பத்தில் அவரவர் ஸ்தானங்களில் அவரவர் சிறந்து விளங்க தன்னாலானதைச் செய்பவள், (வச.23).
- எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையாயிருப்பவள், (வச.25)
- தேவ ஞானத்தைப் போதிப்பவள், (வச.26).
- தன் வீட்டுக்காரியங்களைக் கவனமாய் மேற்பார்வை செய்பவள் (வச.27).
- புகழ்ச்சிக்குப் பாத்திரமாய் நடந்துக்கொள்பவள் (வச. 28,29).
- கர்த்தருக்குப் பயப்படுகிறப் பெண், (வச.30).
- சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்தவள்.

திருமண ஆராதனைகளில் பிரசங்கிக்கத்தக்க சிறந்த குறிப்புகள் இவை. அதே நேரம் வாழ்க்கைக்கேற்ற மிகச்சிறந்த ஆலோசனைகளாய் கைக்கொண்டு நடக்க உதவும் வசனங்கள் இவை.

**ஒரு பத்தியில் (Paragraph) அடங்கும் ஆலோசனைகள்: 30:7-9**ஐப் பாருங்கள்.

“இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்; நான் மரிக்கும்பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும். மாயையையும் பொய் வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக.

நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னை போஷித்தருளும்.

வேதாகமம் முழுவதையும் ஒரு வருடத்தில் வாசிப்பதற்கு ஒரு எளிதான வழியை ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்:

தினமும் நான்கு பக்கங்களை வாசித்தால் ஒரு வருடத்தில் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கலாம்.

அத்துடன் இதையும் கேளுங்கள்: தினமும் வாசிக்கும் வேதபகுதியைத்தவிர நீதிமொழிகளில் தினமும் ஒரு அதிகாரத்தை வரிசையாக 1-ம்தேதியிலிருந்து வாசித்துவந்தால், நீதிமொழிகள் புத்தகத்தை ஒரு மாதத்தில் வாசித்திட இயலும். விடாமல் மாதந்தோறும் அப்படிச்செய்தால், ஒருவருடத்தில் 12முறை இப்புத்தகத்தை வாசித்துவிட முடியும்.

பழமொழிகள் நிறைந்த நம் உலகில் நீதிமொழிகளால் நம் இருதயத்தையும் சிந்தையையும் நிரப்பக் கர்த்தர் கிருபை செய்வாராக!



தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# சுதந்தரித்தல்

**Rev. ஜான் பீட்டர்**

Registrar, ABSC, Pondicherry

கர்த்தர் நமக்கு நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், நம்முடைய குடும்பத்திலும், நம்முடைய ஊழியப்பாதையிலும் சில காரியங்களை செய்வேன் என்று வாக்குப்பண்ணுகிறார். ஆனால் அந்த வாக்குத்தத்தத்தை சுதந்தரிப்பதற்கு நம்முடைய பங்கு அவசியமாக இருக்கின்றது. நமக்கு வாக்குப்பண்ணியிருக்கும் காரியம் நம் புலன்களுக்கு அப்பாற்பட்டதாயும், அது நிறைவேறுவதற்கு எந்த சாத்தியமும் இல்லை என்கிற சூழ்நிலையிலும் நாம் என் பங்கை நிறைவேற்றுவேன் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். இஸ்ரவேலருக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணினார். அதை சுதந்தரிப்பதில் ஒரு சிலரைத் தவிர அநேகருக்கு வழியில் சந்தித்த சூழ்நிலைகளினிமித்தம் உறுதியற்ற தன்மை இருந்ததைப் பார்க்கிறோம். கர்த்தர் வாக்குப்பண்ணினதை நாம் சுதந்தரிக்க நம்முடைய பங்கு என்ன? அல்லது நாம் என்ன செய்யவேண்டும்? என்பதை சில உதாரணங்களோடு பார்ப்போமாக.

## தீர்க்கமான தீர்மானம் எடுத்தல் (Resolute in Resolution)

கர்த்தர் நம் வாழ்க்கையிலே நிறைவேற்றுவேன் என்று சொன்ன காரியம் நிறைவேறுவதற்கு அவர் நடத்தும் பாதையிலே அது கடினமாக இருந்தாலும் அதில் நடப்பதற்கு தீர்க்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டும். மோசே கானான் தேசத்திற்கு வேவுபார்க்க அனுப்பின 12 பேரில் பத்து பேர் அந்த ஜனங்களை எதிர்க்க நம்மால் கூடாது, அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள் என்று தங்களுடைய சூழ்நிலையைப் பார்த்தார்கள் (எண்.13:31-33). அவர்கள் தந்த அந்த அறிக்கையின்மூலம் இஸ்ரவேலர் சோர்ந்துபோய் நாங்கள் எகிப்து தேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும், இந்த வனாந்திரத்திலே செத்தாலும் நலம் என்று சொல்லி தங்களுக்கென்று ஒரு தலைவனை தெரிந்தெடுத்து எகிப்துக்குத் திரும்புவோம் என்று தீர்மானம் பண்ணினார்கள். யோசுவாவுடன் சேர்ந்து காலேபும் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினார். நீ கால் மிதித்த தேசம் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் சுதந்திரமாயிருக்கக்கடவது என்று மோசேயின் மூலம் காலேபுக்கு கட்டளைக்கொடுத்தார் (எண்.14:24; உபா.1:36). காலேப் அப்பொழுது 40 வயதாயிருந்தார் (யோசுவா 14:17). கானான் தேசத்திற்க்குள் சென்றபோது காலேபுக்கு 85 வயதானது. தன்னுடைய 85 ஆம் வயதிலும் தனக்கென்று கர்த்தர் கொடுத்த அந்த மலைநாட்டை கொடுக்கும்படிக்கு தன்னுடைய தீர்மானத்தில் தீர்க்கமாக இருந்தார். தன்னுடைய முதிர்ந்த வயதிலும் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு எனக்கு இருந்த பெலன் (யோசுவா 14:12) இப்போதும் இருக்கிறது என்று சொல்லி அந்தப் பட்டணத்தில் ஏனாக்கியர் இருந்தாலும் அவர் கொடுத்ததை நான் சுதந்தரிப்பேன் என்ற தீர்மானத்தில் உறுதியாக இருந்தார். கர்த்தர் நமக்கு கொடுத்த சுதந்திரத்தை நாம் பெறுவதற்கு எத்தகைய சாதகமான சூழ்நிலை இல்லையென்றாலும், காலம் கடந்துவிட்டாலும் நாம் தீர்க்கமாக நம்முடைய தீர்மானத்தில் நிற்போமாக.

**பொறுப்பை உணர்ந்து செயல்படுதல் : (Realizing Responsibility)**

தேவனுடைய சுதந்திரத்தை நாம் பெறுவதற்கு நம்முடைய பொறுப்பை உணரவேண்டும். ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தார் யோர்தானைக் கடக்காமல் அதன் கிழக்குப்பகுதியாகிய யாசேர் மற்றும் கீலேயாத் தேசத்தை தங்களுடைய காணியாட்சியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் பண்ணினார்கள். அந்த இடம் அவர்களுக்கு தகுந்த இடம் என்றுக் கண்டார்கள் (எண்.32:1). அவர்களின் இந்த வேண்டுகோள் ஆரம்பத்தில் மோசேக்கு முரட்டாட்டம் போல் தோன்றினாலும் (எண்.32:6-15), பின்னர் அவர்கள் பொறுப்புடன் செயல்பட்டதும் மோசேக்கு அவர்கள் கொடுத்த பிரதியுத்திரமும் அந்த பகுதி அவர்களுடைய சுதந்திரமாவதற்கு காரணமாயிருந்தது (எண்.32:15-17). தங்களுக்கிருந்த ஆடுமாடுகளின் எண்ணிக்கையை அவர்கள் பார்த்தபோது அந்த இடம் தகுந்ததாகப் பார்த்தார்கள். தங்கள் குடும்பத்தாரையும் மனதில் வைத்து செயல்பட்டனர். மோசே தங்களுடைய வேண்டுதலைக் கேட்கும் வண்ணமாக, தங்களுடைய சகோதரர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கும் வரைக்கும் யுத்தசன்னதராய் புருஷர்கள் அவர்களோடு வருவதாக வாக்குறுதிக் கொடுத்தனர் (எண்.17-19). சுதந்திரத்தை நாம் பெற்றுக்கொள்ள ஒரு குடும்பத்தலைவராக நமக்கு இருக்கும் அந்த பொறுப்பை உணரவேண்டும். அந்தக் கோத்திரத்தார்கள் முன்னின்று தங்களுடைய பட்டணங்களையும் குடும்பத்தையும் கட்டினதுபோல நாமும் நம்முடைய பொறுப்பை உணர்ந்து செயல்பட்டு நம்முடைய குடும்பத்தை கட்டியெழுப்புவோமாக.

**உண்மையாக இருத்தல்: (Remain Faithful)**

ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதி கோத்திரத்தார்கள் தாங்கள் சொன்னபடியே தங்களுடைய சகோதரரோடே யோர்தானைக் கடந்தார்கள் (யோசுவா 4:12). சிலர் தீர்மானங்கள் எடுப்பார்கள். ஆனால் நிறைவேற்றாமல் போவார்கள். இந்தக் கோத்திரத்தார்கள் அவர்களுக்கு மோசே கட்டளையிட்டபடியே செய்ததுமல்லாமல், தாங்கள் வாக்குக்கொடுத்தபடியே (எண்.32:17) இஸ்ரவேலின் பிற கோத்திரங்களுக்கு முன்பாக தீவிரமாய் கடந்துபோனார்கள் (யோசுவா 4:12). தாங்கள் கொடுத்த வாக்கில் உண்மையாக இருப்பதற்கு தங்கள் வாழ்க்கையையும் பணயம்வைத்து பிற கோத்திரங்களுக்கு முன்னே சென்றனர். மோசேக்கு கீழ்படிந்தபடியே யோசுவாவுக்கும் கீழ்படிந்தார்கள் (யோசுவா 22:2). தங்கள் சகோதரரைக் கைவிடாமல் கர்த்தருடைய கட்டளையைக் காத்துக்கொண்டு நடந்தார்கள் (யோசுவா 22:3). யோர்தானைக் கடக்கும்போதும், அதை கடந்தபின்பு ஏற்பட்ட யுத்தங்களின் போதும் சந்தித்த சவால்களின் மத்தியிலும் முழு இஸ்ரவேலரும் தங்கள் தங்கள் சுதந்திரத்தைப் பெறும் வரைக்கும் அவர்கள் பொறுமையோடு காத்திருந்ததில் அவர்களுடைய உண்மை விளங்குகின்றது. இந்தக் கோத்திரத்தார்கள் தங்கள் தேசத்திற்கு யோசுவா கட்டளையிட்டபடியே திரும்பினபின்பு (யோசுவா 22:1-9) ஒரு பீடத்தை கட்டினார்கள் (யோசுவா 22:11). மற்ற இஸ்ரவேலர்கள் இதை தவறாகப் புரிந்துகொண்டனர். அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்யப் புறப்பட்டபோது இந்த கோத்திரத்தார்கள் அந்த பீடத்தை கட்டினதின் நோக்கத்தை விளக்கினதைப் பார்க்கும்போது அவர்கள் தேவனுக்கு உண்மையாக இருப்பதும் தங்களுக்குப் பின்வரும் சந்ததிகளும் தேவனுக்கு உண்மையாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கிருப்பதும் தெளிவாகத் தெரிகிறது (யோசுவா 22:22-29). கர்த்தர் நமக்கு தரவிருக்கும் காரியங்களைப் பெறும்வரைக்கும் மாத்திரம் அல்ல, பெற்ற பின்பும் அவருக்கு உண்மையாக இருக்கவேண்டியது அவசியம். அவருக்கு உண்மையாக இருக்கும்போது

இதன் தொடர்ச்சியை 26-ம் பக்கம் பார்க்க



# மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்


Rev. தாமரைசெல்வன்

தமிழ் பிரதேச வடமேற்கு மிஷன்


அன்பான வாசகர்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையில்லா நாமத்தில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தமிழ்நாடு ஏ.ஜி மிஷன் துறையிலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம். இந்த 2024-ஆம் ஆண்டில் இதுவரை காணாத, கேட்டிராத பெரிய காரியங்களை நம் ஒவ்வொருவருக்கும் தேவன் செய்வாராக.

தேவன் சொன்னதை நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய் (விடுவிப்பாய், பாதுகாப்பாய்) என்பதே.

**மீதியானியர் யார்? அவர்களது செயல் என்ன?**

'மீதியானியர்' என்னும் எபிரெய பெயருக்கு "சண்டை, மோதல்', 'சச்சரவு', 'விவாதம்' (Strife) என்று பொருள். பழைய ஏற்பாட்டில் மீதியான் என்னும் பெயரில் ஒரு நபரும் ஓர் இடமும் உள்ளன.

ஆபிரகாம், கேத்தூராள் ஆகியோரின் குமாரன் (ஆதி.25:1-6).

1. மீதியானியர் இஸ்ரவேலருக்கு ஒரு கண்ணியாகவே இருந்தார்கள்.
2. மோசேயின் காலத்தில் மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு பலத்த சத்துருக்களாக இருந்தார்கள் (எண்.22:4-7; 25:15-18).
3. மீதியான் ஆபிரகாமின் குமாரன். ஆகையினால் இவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடு தூரத்து உறவுக்காரர்கள். எபிரேய ஜனங்களோடு இவர்கள் சிநேகமாக இருப்பதற்கு பதிலாக சத்துருக்களாக இருந்தார்கள். இவர்கள் கிழக்கத்திய புத்திரர் என அழைக்கப்பட்டார்கள் (நியா.6.3,33).
4. மீதியானியர் வர்த்தகர்கள்:(விற்பவர்கள்) பணம் சம்பாதிக்க நினைத்து விற்பவர்கள், பணமே இவர்களுக்கு முக்கியம். வேறெதுவும் முக்கியமல்ல (ஆதி.37:28,36).
5. மோசம் போக்கி இஸ்ரவேலரை நெருக்கினவர்கள் (எண்.25:18).
6. விரோதமாக எழும்பி வருகிறவர்கள். திரளாய் வருகிறவர்கள் (நியா.6:35).
7. விளைச்சலை கெடுத்து, ஆகாரத்தையும் ஆடு மாடுகளையும் வைக்காதே போகிறவர்கள் (நியா.6:4).
8. தேசத்தை கெடுத்து விட வருகிறவர்கள் (நியா.6:5).
9. இஸ்ரவேலரை மிகவும் சிறுமைப்படுத்துகிறவர்கள் (நியா.6:6).

**அன்று போல் இன்றும்**

ஆபிரகாம், யோசேப்பு, மோசே, நியாயாதிபதிகளின் நாட்களில் இருந்ததுபோல இன்றும் நம் நாட்களில் நம் தேசத்தில், பட்டணத்தில், தலைமுறையில், தேவ ஜனங்களுக்கு விரோதமாய், தேவதிட்டங்களுக்கு விரோதமாய், நம் தாய் தேசத்தில் பல பல வல்லமைகள் சுவிசேஷத்திற்கு, திருச்சபைகளுக்கு, தேவராஜ்யம் வெளிப்பட முடியாமல் தடுக்கிறதை நாம் பார்க்கிறோம். திரள் திரளாக விரோதங்கள் எழும்புகின்றதே. தேசம் கெடுக்கப்படுகிறதே.

அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள் (நியா.6:6). இன்றும் நாம் நம் தேசத்திற்காக,, பட்டணத்திற்காக, ஜனங்களுக்காக, நம் தலைமுறையினரின் விடுதலைக்காக தேவனை நோக்கி முறையிடுவோம், மன்றாடுவோம், பரிந்து பேசுவோம், திறப்பில் நின்று ஜெபிப்போமாக.

அன்று கிதியோன் என்பவனுக்கு தரிசனமாகி பேசி உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ; மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார் (நியா.6:12-14).

இன்று நமது ஆண்டவராகிய இயேசு பரத்திற்கு ஏறி போகுமுன் சீஷருக்கு, திருச்சபைக்கு பிரதான கட்டளையாக 'நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,.. ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள்' என்று கூறி உள்ளாரே (மத்.28:18-20.) நீங்கள் உலகமெங்கும்போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றாரே (மாற்கு 16:15-18). சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள் (அப்.8:4) என்று வாசிக்கிறோம்.

**நாம் என்ன செய்து கொண்டு இருக்கிறோம்?**

**இந்த 2024-ஆம் ஆண்டில் என்ன செய்யப்போகிறோம்???**

- அழிகின்ற ஆத்துமாக்களுக்காக, கெடுக்கப்பட்டு வரும் நம் தேசத்தை காப்பாற்றுவதற்காக, சகல தீய வல்லமைகளிலிருந்து விடுவிக்கப்பட, அனுதினமும் மன்றாடி, துக்கித்து,அழுது, தேவனை நோக்கி முறையிடுகிறோமா ?
- புறப்பட்டு போய் என்ற வார்த்தையின்படி நீங்கள் புறப்பட்டு போக தீர்க்கமான, தீர்மானம், முடிவு, திட்டங்கள் உங்களுக்கு உண்டா? வருடத்திற்கு ஒரு முறையாவது வட மாநில மிஷன் பயணம் செய்ய உங்கள் சபை போதகரோடு சேர்ந்து திட்டமிடுங்கள். இவ்வருட இறுதிக்குள் ஒருமுறையாவது எங்கே போவது? என உடனே தீர்மானித்து திட்டமிடுங்கள் .
- ஒருமுறைகூட கேள்விப்படாத, ஒரு முறை கூட தேவ நன்மையை அடையாத, ஒருமுறை கூட தேவ அன்பை ருசிக்காத 130 கோடிக்கும் அதிகமான, வலதுகைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் உள்ள நம் தலைமுறைகளுக்கு தேவனின் முழுநேரப் பணிக்காக நீங்கள் வருவீர்களா?
- தேவ அழைப்பு உள்ள உங்கள் பிள்ளைகளை சந்தோஷமாக அனுப்பி வைப்பீர்களா?
- நீங்களும் நானும் போகமுடியாத, செய்ய முடியாத இடத்திற்கு போகிற, செய்கிற ஊழியர்களுக்கு மிஷனரிகளுக்கு பொருளாதார உதவிகள்-மாதந்தோறும் உதவிகள், இடம்வாங்க, ஆலயம் கட்ட, அவசர அவசிய தேவைகளுக்கு உதவிக்கரம் நீட்டுவீர்களா?
- இன்னும் தங்கள் சொந்த மொழியில் வேதாகமம் கிடைக்கப்பெறாமல் இருக்கும் சுமார் 1600 மொழிகளில் ஒரு சில மொழிகளில் இருந்து வேதாகமம் மொழிபெயர்ப்பு பணிக்கு வருவீர்களா? உதவி செய்வீர்களா?

வாருங்கள். நாம் ஒன்றிணைந்து செயல்பட்டு நம் பாரதத்தை மீதியானியர் என்னும் அடிமைத்தனத்திலிருந்து இரட்சிப்போம். தேவன் நம்மோடு இருக்கிறார். அவர் நம்மை பயன்படுத்துவார். உடன் செயல்படுவோம். இந்த வருடம் பெரும் மாற்றங்களை காண்போம்.

**இந்தியாவில்**

- எல்லா மாநிலங்களின் எல்லா எல்லைகளிலும்...
- எல்லா ஜனக்கூட்டங்களிலும்...
- எல்லா மொழிகளிலும்... மீட்புக் காண்போம்.

**இந்தியாவை தாண்டியும்**

- மீட்பதற்காக செயல்படுவோமாக. ஆமென்.
- கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்.

உங்களுக்கு இந்த காரியத்தில் வழிகாட்ட எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**வடமேற்கு மிஷன் பணிகளுக்காக**

1.சங்கை. தாமரை செல்வன் - 94439 77272
2.சங்கை. மனோஜ் குமார் - 94434 52954
3.சங்கை. கலை தேவதாசன் - 94440 72443

**வடகிழக்கு மிஷன் பணிகளுக்காக**

4.சங்கை. எட்வின் பிரபாகரன் - 94439 79441
5. சங்கை. ஜெகில் எபிதாஸ் - 98401 35836
6. சங்கை. ஜேசுராஜ் - 78712 49472

---

## சமூக சேவை செய்து உலக சாதனை

கோவை வடக்கு மண்டலத்தில் சிறுமுகை பகுதியிலுள்ள எழுப்புதல் ஏஜி சபையின் போதகர் பாலா மற்றும் அவரது மனைவி இருவரும் இணைந்து கோவை மாவட்டத்தில் சாலையோரத்திலுள்ள மனநலம் பாதிக்கப்பட்டோர், ஆதரவின்றி தெருக்களில் விடப்பட்டோர், பிச்சையெடுப்போர் என 100 பேரை கண்டுபிடித்து அவர்களுக்கு முகச்சவரம் செய்து, தலை முடி திருத்தி, தங்கள் கைகளினால் குளிக்க வைத்து, அவர்களுக்கு புத்தாடை உடுத்தி, உணவு கொடுத்து சக மனிதனாக மரியாதை செய்து அவர்கள் இச்சமூகத்தில் வாழ வழிவகை செய்துள்ளனர். நவம்பர் மாதம் 20-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை இரவு பகலாக இப்பணியை செய்துள்ளனர். இந்த செயலினை யுனிவர்சல் அர்ச்சீவர்ஸ் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் என்ற உலக சாதனை நிறுவனம் உலக சாதனையாக பதிவு செய்து சான்றிதல் வழங்கியுள்ளது. கிறிஸ்தவர்கள் இறைப்பணியை மட்டுமல்ல, சமூகப்பணியென்னும் திருப்பணியையும் செய்ய கடமைப்பட்டுள்ளோம் என்பதற்கு இந்த செயல் பெரும் எடுத்துக்காட்டாக அமைகிறது.




சங்கை. பெ. பெவிஸ்டன்



# அடுத்த நிலை நோக்கி

## (TOWARDS NEXT LEVEL)

Rev.K. ராஜா

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகளுக்கு, உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியாம் இரட்சகர் இயேசுவின் நாமத்தில் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு புதிய ஆண்டும் வரும்போது, பொதுவாகவே அனைவரது உள்ளத்திலும் நான் இப்பொழுது இருப்பதை விட இந்த புதிய ஆண்டில் இன்னும் சிறப்பாக உயர்ந்து இருக்க வேண்டும் என்ற ஒரு தீராத ஆசை வரும். அதாவது தான் இப்பொழுது இருக்கிற நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு உயர்ந்து போகவேண்டும் என்கிற எண்ணம் அது.

அடுத்த நிலை நோக்கி போகவேண்டும் என்கிற எண்ணத்தோடு இருக்கிற உங்களுக்கு சில ஆலோசனைகள்.

### 1. DECIDE YOUR NEXT LEVEL: உங்கள் அடுத்த நிலையை தீர்மானியுங்கள்

நீங்கள் எங்கே சென்றடைய விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானிக்காவிட்டால், நீங்கள் இப்போது இருக்கும் அதே இடத்தில் தான் எப்போதும் இருப்பீர்கள்.

- 50% மதிப்பெண்ணிலிருந்து 80% மதிப்பெண்ணிற்கு உயருதல்.
- வகுப்பில் முதல் மாணவராக உயருதல்.
- பள்ளியில் முதல் மாணவராக உயருதல்.
- மாநிலத்தில் முதல் மாணவராக உயருதல் மற்றும்
- உங்களது தனித்திறமையை சிறப்பாக வெளிப்படுத்த விரும்புகிற காரியமாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அதில் நீங்கள் அடைய விரும்புகிற உயரத்தை தீர்மானியுங்கள்.

“வெற்றி பெறுவதற்கு ஒருவரிடம் இருக்க வேண்டிய முக்கியப்பண்பு நலன் ஒன்று உள்ளது. ஒரு திட்டவட்டமான குறிக்கோளும். அதாவது, தனக்கு என்ன வேண்டும் என்பதைப் பற்றிய அறிவும், அதை அடைவதற்கான தணியாத ஆழ்விருப்பமும்தான் அது” – நெப்போலியன் ஹில்.

### 2.DIVIDE YOUR LEVEL AIM INTO SMALL GOALS : சிறிய இலக்குகளாக பிரியுங்கள்

- உயர்ந்த நோக்கத்தைதான் உங்களது அடுத்தநிலை என்று தீர்மானித்து இருப்பீர்கள் உங்களுக்கு வாழ்த்துக்கள்.
- உங்கள் நோக்கத்தை அடைவதற்கு வசதியாக அவைகளை சிறிய இலக்குகளாக பிரித்துக்கொள்ளுங்கள்.
- உதாரணமாக 50% மதிப்பெண் எடுத்துக் கொண்டிருக்கிறவர்கள் முதலில் 60% மதிப்பெண்ணை இலக்காக வைத்து முயற்சி செய்யுங்கள். நிச்சயமாக உங்களால் முடியும்.
- பிறகு 70% அதன் பிறகு 80% என கொஞ்சம், கொஞ்சமாக இலக்குகளை உயர்த்திக் கொண்டே சென்று உங்கள் நோக்கத்தில் (AIM) உயர்ந்து நில்லுங்கள்.
- தினமும் சிறிய முன்னேற்றங்கள், காலம் செல்ல–வியத்தகு முடிவுகளைத் தரும்.

## 3. BE PERSISTENT IN YOUR GOAL: உங்கள் இலக்கில் விடாமுயற்சியுடன் இருங்கள்

- விடாமுயற்சிதான் பெரிய, பெரிய சாதனைகளைச் செய்து சாதனையாளர்களின் பொதுவான பண்பாக இருப்பதை பார்க்க முடிகிறது.
- துரதிஷ்டவசமாக சிலர், நல்ல தீர்மானங்களை எடுத்து செயல்பட ஆரம்பித்து இடையிலேயே இலக்கை நோக்கி முயற்சியை தோற்றுவிடுவோமோ என்ற பயத்தில் விட்டு விடுகிறார்கள்.
- விஷயங்கள் கடினமாவதால் நாம் அஞ்சுவதில்லை, நாம் அஞ்சுவதால் விஷயங்கள் கடினமாகின்றன என்று செனோக்கா ஞானி கூறுகிறார்.
- என்ன வேண்டும் என்கிற தெளிவும், அதற்கான கடின உழைப்பும், விடா முயற்சியுமே வெற்றிக்கு வழிவகுக்கும்.
- வருடங்கள் மாறுவதால் வாழ்க்கை மாறாது, விடா முயற்சி இருந்தால் மட்டுமே வாழ்க்கை மாறும்.

## 4. PRACTISE SELF-DISCIPLINE : சுய ஒழுக்கத்திற்கு உட்படுத்துங்கள்

- சுய ஒழுங்குதான் இலக்குகளுக்கும் அவற்றை அடைவதற்கும் இடையேயான பாலம் என ஜிம் ரான் என்பவர் கூறுகிறார்.
- ஆம், நீங்கள் இலக்கை அடைவதற்கு வேறு எந்த காரணங்களையும் விட, உங்கள் வாழ்க்கையின் சுய ஒழுங்கு (SELF-DISCIPLINE) தான் முக்கியமான காரணமாக அமைகிறது.
- சுய ஒழுங்கு என்பது, இலக்கை அடைவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை தீர்மானிப்பதும். தீர்மானித்தபின் அதில் நிலைத்திருப்பதும் ஆகும்.
- மோசமான பழக்கங்களை உருவாக்கிக் கொள்வது சுலபம், ஆனால் அவற்றோடு இலக்கை நோக்கி தொடர்வது மிகவும் கடினம். நல்ல பழக்கங்களை உருவாக்கிக் கொள்வது கடினம். ஆனால், அவற்றோடு இலக்கை நோக்கித் தொடர்வது சுலபம்.

## 5.ENCOURAGE YOURSELF:உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்

- அடுத்தநிலை நோக்கி செல்லும் உங்களது முயற்சியில் இடையே வரும் தொய்வுகள், தோல்விகள், மற்றவர்களின் கேலி, கிண்டல்கள் உங்களை உற்சாகமிழக்கச் செய்யலாம்.
- உங்கள் இலக்கை அடைவதற்கான ரகசிய ஆயுதம் ஒன்று உண்டு என்று சொன்னால், அது உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்வதுதான்.
- உங்கள் இலக்கை அடைவதற்கு நேராக உங்களை உந்தித்தள்ளும் சக்தி தான், உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்வது என்பதை மறந்து விடாதீர்கள்.
- ஒருபோதும் தோற்காதவர்கள் வெற்றியாளர்கள் அல்லர் மாறாக, ஒருபோதும் பின் வாங்காதவர்களே வெற்றியாளர்கள்.

தற்போது என்ன செய்து கொண்டு இருக்கிறோமோ, அதையே செய்து கொண்டு இருந்தால், அது அடுத்த நிலைக்கு கொண்டு செல்லாது. ஆகவே, தேவையான மாற்றங்களை செய்து அடுத்த நிலைக்கு முன்னேறிச் செல்ல வாழ்த்துகிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ

**பாஸ்டர். பெவிஸ்டன்**
பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan

ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, கடந்த ஆண்டு முழுவதும் பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். தேவன் கிருபையாக தந்த இப்புதிய ஆண்டில் புதிய தீர்மானங்களோடு, புதிய உற்சாகத்தோடு, புதிய திட்டங்களோடு தேவனது புதிய கிருபையை பெற்று இயங்க தேவன் அருள்புரிவாராக. இம்மாத கதை கேட்கலாமா? வாங்க போகலாம்.

ருமேனியா என்ற தேசத்தில், இயேசு கிறிஸ்துவின் மீது மிகுந்த அன்பு கொண்ட ஒரு ஏழை தச்சர் ஒருவர் தன் வாழ்வில் ஒரு யூதரையாவது இரட்சிப்புக்குள் வழிநடத்த விரும்பினார். அதற்காக தினமும் தொடர்ந்து ஜெபித்து வந்தார். ஆண்டவரே, நான் இவ்வுலகை விட்டுச்செல்லும் முன், தயவுசெய்து எனக்கு ஒரு யூதரை அனுப்புங்கள். நான் அவரை உங்களிடம் வழி நடத்துகிறேன். பல வருடங்களாக இப்படித்தான் ஜெபித்தார். ஒருநாள் பகல் நேரம் ஒரு இளம் வாலிபர் தன் வீட்டின் வழியாகச் செல்வதைப் பார்த்தார். அவர் ஒரு யூதராகத் தெரிந்தார். அந்த பையனை நோக்கி ஓடி வந்து, தன் வீட்டிற்கு அழைத்து வந்தார். பசியோடு இருந்த அவனுக்கு தன் வீட்டில் நல்ல உணவை வழங்கினார். பிறகு, ஒரு பைபிளைக் கொடுத்து, இது மனுஷனை படைத்த கடவுளின் புனிதநூல். இந்த பைபிளைத் தவறாமல் படி தம்பி என கூறினார். அந்த வாலிபன் ஒரு கடவுள் நம்பிக்கை இல்லாத ஒரு நாத்திகர். ஆகவே கொஞ்சம் கோபம் வந்தது, எனினும் தச்சரின் அன்பினாலும் உபசரிப்பினாலும் கவரப்பட்ட அவன் அமைதியாக பைபிளை வாங்கிக்கொண்டு சென்றான்.

சில நாட்களுக்கு பின், ஒரு துன்பமான சூழ்நிலையில் தச்சன் கொடுத்த பைபிளைப் எடுத்து படிக்க ஆரம்பித்தார். அவர் படிக்கும்போது ஒவ்வொரு பக்கமும் பற்றியெரியும் நெருப்பாகத் தோன்றியது, அவர் அழுதார், தான் செய்த தவறுகளுக்காக வருந்தினார். இனிமேல் மரணமே வந்தாலும் இந்த இயேசு கிறிஸ்துவுக்காக தான் வாழ்வேன் என்ற உறுதியுடன் ஊழியம்செய்து, தேவனுக்காக எண்ணுக்கடங்காத சித்தரவதைகளை சகித்து இரத்த சாட்சியாக மரித்தார். யார் அந்த இளைஞர் தெரியுமா? **'கிறிஸ்துவுக்காக சித்தரவதை'** (Tortured for Christ) என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதிய **"படுவேதனையில் பரம வெற்றி"** பிரபல ருமேனிய சுவிசேஷகரான **"ரிச்சர்ட் உம்ப்ராண்ட்"** ஆவார் மற்றும் அவர் **'தியாகிகளின் குரல்'** (Voice of the Martyrs) நிறுவனர் ஆவார்.

தம்பி தங்கச்சி, பரிசுத்த வேதாகமம் ரிச்சர்ட் உம்ப்ராண்ட் என்ற இளைஞனின் வாழ்க்கையை சரித்திரத்திரல் தவிர்க்க முடிலாத, புகழ்வாய்ந்த ஒரு ஊழியராக மாற்றியது உண்மையெனில், இன்று வேதாகமத்தை வாசிக்கும் உன் வாழ்க்கையையும் மாற்றும் என்பதில் சந்தேகமில்லை. ஆம் அத்தகைய விலையேறப்பெற்ற பொக்கிஷம் வேதபுத்தகமே.

மைக்கேல் என்ற சிறுவனுக்கு 10-வது வயது பிறந்தநாள் பரிசாக பலவிதமான சாக்லேட்டுகள். ஒரு அழகிய கைக்கடிகாரம் மற்றும் ஒரு அழகிய வேதபுத்தகம் ஆகிய மூன்று பொருட்களை அவனுடைய பெற்றோர் அவனுக்கு அளித்தார்கள். அவன் சிறுவனாக இருந்தபோது இந்த மூன்று பொருட்களையுமே விரும்புவதாக தன் பெற்றோரிடம் கூறினான். ஆனால் அவன் வளர்ந்து வாலிபனாகி, ஒரு நற்செய்தி கூட்டத்தில் தனது சாட்சியை பகிர்ந்து கொள்ளும்போது இவ்வாறு கூறினான் என் பெற்றோர் 10 வது வயது பிறந்தநாள் பரிசாக பலமுறை விதவிதமான சாக்லேட்டுகளை கொடுத்த போதிலும், ஒரு சில நாட்களிலேயே அவற்றை நான் சாப்பிட்டு விட்டேன். எல்லா சாக்லேட்களும் காலியாகிவிட்டன. மேலும் அழகிய கைக்கடிகாரத்தை எனக்கு பரிசாக அளித்தனர். அதுவும் ஓரிரு வருடங்கள் மட்டுமே நன்றாக ஓடியது. அதன்பின்னர் அது பழுதடைந்து பயனற்றதாக போய்விட்டது. ஆனால் என் பெற்றோர் எனக்கு பரிசளித்த அழகிய வேதபுத்தகமோ இன்றுவரை உயிருள்ளதாகவும், பேசும் புத்தகமாகவும் எனக்கு உதவிகரமாய் உள்ளது. தாய் தகப்பன் இருவரும் இழந்த என்னை பார்ப்பவர்களெல்லாரும் அனாதை என்கிறார்கள். ஆனால் உண்மையெனவெனில் பரிசுத்த வேதாகமம் என்னுடன் இருப்பதால் நான் அனாதை அல்ல. இருள் சூழ்ந்த உலகில் டார்ச் லைட் போல பைபிள் இருக்கும்போது எனக்கு ஏது கவலை? என் வாழ்நாள் முழுதும் பைபிள் எனக்கு பயனுள்ளதாகவே இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே வேத புத்தகம் தான் உலகிலேயே மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷம் என சாட்சி பகர்ந்தான்.

பிரியமான தம்பி தங்காய், அனுதினமும் வேதத்தை நன்கு நேசித்து. வாசித்து, தியானித்து அதன்படி நடக்கும் ஒவ்வொருவருக்கும் இயேசப்பா ஏராளமான நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் நமக்குத் தருவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. வேத புத்தகமே நமக்கு சிறந்த வழிகாட்டி. நித்திய ஜீவனை நாம் பெறுவதற்கும், பரலோக ராஜ்ய பாக்கியத்தை அடைவதற்கும் தேவையான நெறிமுறைகளை நமக்கு வழங்குவதும் வேத புத்தகமேயாகும். எனவே, இந்த புதிய ஆண்டில் புதிதாக ஒரு வேதாகமத்தை வாங்கி, ஒவ்வொருநாளும் அதை வாசிக்க ஒரு தீர்மானம் எடுப்போம்.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியை தந்து இலையுதிராயிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்.1:2,3).

---

**19-ம் பக்க தொடர்ச்சி**

பிறருக்கும் நாம் உண்மையாக இருப்போம். மேலும் நாம் மாத்திரமல்ல நம்மோடு இருக்கும் நம்முடைய குடும்பத்தாரும், நம்முடைய சந்ததியாரும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்கு நம்முடைய முயற்சி அவசியமாக இருக்கின்றது.

இவ்வாறு தேவன் நமக்கு வாக்குப்பண்ணினதை சுதந்தரித்துக்கொள்ள நம்முடைய நிலைமையை ஆராய்ந்து தீர்க்கமான தீர்மானங்களையும், நம்முடைய பொறுப்பை உணர்ந்து செயல்படுவதும், நாம் சொல்தவறாமல் உண்மையாக இருத்தலும், தேவனுக்கு உண்மையாக இருத்தலும் அவசியமாக இருக்கின்றது. நாம் இதை செய்தால் தேவன் நம்முடன் இருந்து நமக்கு வாக்குப்பண்ணினதை சுதந்தரிக்க உதவி செய்வார்.



# போட்டிகள் நிறைந்த உலகம்

Rev. J. தேவதாசன் கலையரசன்
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்

"குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும்" (நீதிமொழிகள் 21:31).

பள்ளியிலிருந்து வீடு திரும்பும் பிள்ளைகள் கூறும் முதல் பிரச்சனை, வேறு ஒருவனைச் சொல்லி "அவன் எப்போதும் என்னோடு போட்டிபோடுகிறான்" என்பதே. வீடுகளிலும் பிள்ளைகளின் சத்தம் பெரிதாவதற்கு காரணம் ஏதோ ஒரு போட்டி சம்மந்தப்பட்ட பிரச்சனையாக இருக்கும். வேலைஸ்தலம் சென்றால் அங்கேயும் யாரோ ஒருவர் போட்டிபோடுவதால் ஏற்படும் பதஷ்டமே முதன்மை பிரச்சனையாகிறது.

அதே விதத்தில் ஒவ்வொரு ஸ்தல சபைக்கும், போதகருக்கும் ஒரு போட்டி எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். போட்டிகளற்ற ஓய்வு, யுத்தமற்ற இளைப்பாறுதலை விரும்பும் மக்கள் சராசரியான பொது ஜனமாகிவிடுவதுபோல, போட்டி களத்தை விரும்பாத சபைகளும் சராசரி சபைகளாகிவிடுகிறது. போதகர்கள் சராசரி போதகராகிவிடுகிறார்கள்.

போட்டிகளை எதிர்கொள்ளத் தயாராகும் சபைகளே எல்லா பரிமாணங்களிலும் **வளர்ச்சியும், வெற்றியும்** அடைகின்றன. ஒரு பள்ளிச் சிறுவன் தன் சக நண்பர்களால் ஏற்படும் போட்டிகளைச் சமாளிக்க இயலாதபோது, **முறுமுறுக்கிறான், மனஅழுத்தம் அடைகிறான் (Depression)**, **எப்போதும் பிறரை சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறான், குற்றம்சாட்டுகிறவனாகிறான், "என்னால் முடியாது"** என்ற மனநிலைக்குத் தள்ளப்படுகிறான். பெற்றோர்களின் உதவியால் **வேறு பள்ளி மாறுகிறான்**, ஆனால் அதே காட்சிதான் அங்கும் தொடர்கிறது. அவனது பிரச்சனை சக போட்டியாளர்களல்ல, அவனது சொந்த மனப்பான்மை தான் பிரச்சனை. தனது பார்வை தான் பிரச்சனை என்று, கண்டுபிடிக்கும் மட்டும் அவன் தோல்வி மனிதனாகவே வாழ்கிறான் என்று தனக்குள் ஒரு **மாற்றம்** தேவைப்படுகிறது, போட்டியாளர்கள் ஒரு பிரச்சனையே இல்லையென்று கண்டுபிடிக்கின்றானோ, அன்று முதல் சமூகத்தில் அவன் **வளர** ஆரம்பிக்கிறான், **வெற்றி** மனிதனாக மாறுகிறான். இந்தக் காரியங்கள் அனைத்தும் ஒவ்வொரு விசுவாசிக்கும், ஒவ்வொரு சபைக்கும், ஒவ்வொரு போதகருக்கும் பொருந்தும்.

புதிய ஆண்டிலே பல புதுப்பித்தல்கள், சில புதிய துவக்கங்களை செய்கிற நாம், போட்டி நிறைந்த இந்த உலகத்தில் அதை எதிர்கொள்ள, வெற்றிகொள்ள ஆயத்தமாவோம்.

## I. வேதாகமப் புருஷர்கள் அனைவருக்கும் இருந்த பொதுப் பிரச்சனை

ஒரு மொர்தெகாய்க்கு ஒரு ஆமான் என்ற பிரபல்யமான கதாபாத்திரங்களுக்கு மட்டுமல்ல, வேதாகம கதாபாத்திரங்கள் அனைவருக்குள்ளும் இருந்த பொதுப் பிரச்சனைதான், இது.

**ஒவ்வொரு வேதாகம கதாபாத்திரங்களும் 4 வித மக்களை எதிர்கொண்டார்கள்**

**1. விமர்சகர்கள்**:பொது ஜனங்களின் விமர்சனங்களுக்கு பயப்படாமல், தேவ கட்டளையை மட்டும் முன்நிலைப்படுத்தினதால், நோவாவினால் தேவ திட்டத்தை நிறைவேற்றி பேழையைக் கட்ட முடிந்தது (ஆதி. 6:22).

**2. போட்டியாளர்கள்** : நண்பர்கள், உறவினர் வட்டாரத்திலிருந்தும் போட்டியாளர்கள்

எழும்புகிறார்கள். ஆபிரகாமிற்கு நன்றியாக இருந்திருக்க வேண்டிய லோத்து ஆபிரகாமிற்கு போட்டியாளனானான். அப்படி ஒரு போட்டியாளனாக லோத் எழுந்தது நன்மைக்குத்தான். அவனை அன்பினால் மேற்கொண்ட ஆபிரகாம் தான், அதன் பின் உலகத்தையே புரட்டிப் போட்ட ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டான் (ஆதி.13:14-18).

**3. எதிரிகள் :** தாவீதுக்கு கோலியாத் என்ற எதிரி இல்லாமல் யோனத்தான் என்ற உயிர் நண்பன் மட்டும் இருந்திருந்தால், தாவீதின் சரித்திரம் இந்த அளவு மேன்மை பெற்றிருக்குமோ? கூடாதே. சொந்த சகோதரர்கள் போட்டியாளர்களாயிருக்கும்போது தாவீது **ஆடு மேய்க்கும் நிலையில்** இருந்தான். கோலியாத் என்ற வலிய எதிரி வந்ததால் தான் அவன் அரசன் ஆனான் (1சாமு. 18:1-3, 17:24-51).

**4. ஆதரிக்கும் நண்பர்கள் :** இயேசு கிறிஸ்துவிற்கே ஆதரிக்கும் நண்பர்களான நெருங்கிய சீஷர்கள் தேவைப்படுமானால், எந்த ஒரு மனிதனுக்கும், போதகருக்கும், தன் உள் மன காயங்களை-பாரங்களை பகிர்ந்துகொள்ள உயிர் நண்பர்கள் தேவைதான். ஒவ்வொரு வேதாகம பாத்திரங்களுக்கும் ஆதரிக்கும் நண்பர்கள் இருந்ததாக வேதம் கூறுகிறது (யோவான் 15:15).

- இப்படிப்பட்ட நான்கு விதமான கலவை உறவுகளே, நமது சொந்த பந்தத்திலும், உடன் வேலை செய்பவர்கள் மத்தியிலும், ஏன் உள்ளூர் சபையிலும் நமக்கு கிடைப்பார்கள்.

T.D.ஜேக்ஸ் என்ற தேவ மனிதர் “நமது உயர்வுக்கு காரணம் உயிர் நண்பர்கள் மட்டுமல்ல போட்டியாளர்கள் தான் முக்கிய காரணம்” என்கிறார்.

## II.சபைப்போதகர் என்ற நிலையில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

### 1. விமர்சனங்களை கையாளும் விதம்

- எனது சபையிலும் சில விமர்சகர்கள் இருப்பார்கள் என்பதை முதலாவது மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- இயேசுவையே போஜனபப் பிரியன் என விமர்சிப்பார்களேயானால், பட்டமரமான, மனிதனான நான் எம்மாத்திரம். இதை உணர்ந்த பொதுவாழ்வில் உள்ளவர்கள் எவருமே, தாங்களும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதை ஏற்றுக்கொள்ள முடியும்.
- சமூகத்தில் சாதித்தவர்கள் அனைவருமே **விமர்சகர்களோடு போராடிக்** கொண்டிராமல், அவர்கள் சொன்ன விமர்சனங்களை தங்கள் வளர்ச்சிக்காக பயன்படுத்தியிருக்கிறார்கள்.
- உனக்கு திமிர் அதிகம் என்று கூறிய தனது சகோதர்களே தனது முதல் எதிரிகள் என்று தாவீது நினைத்திருந்தால், அவர்களோடு வாக்குவாதம் செய்தே நேரத்தை வீணாக்கியிருப்பான். அவனுடைய வாழ்வில் திருப்புமுனையாக அமைந்த கோலியாத்துடன் நடந்த யுத்த களத்தையே இழந்திருப்பான். எனவே விமர்சகர்களையே எப்போதும் மனதில் சுமந்து இருதய வலிக்கு இடம் கொடாமல், விமர்சனங்களை வளர்ச்சிக்கான படிக்கட்டுகளாக மாற்றிக்கொள்ள படிப்பது அவசியம்.
- நமது போதகரின் பிரசங்கம், அவரது சொந்த வாழ்க்கைப் புராணமாகவே இருக்கிறது, என்று ஒரு விமர்சனம் நமது சபையில் வந்தால் அதைப் பொருட்படுத்தாமல் கடந்துவிடுகிறது நல்லதல்ல. அதேசமயம் இதுபோன்ற விமர்சனத்தை ஒருவர் கூறக் கேட்டால், இவன் எப்போதுமே அப்படித்தான் என்று அவனுடன் யுத்தம் பண்ணிக்கொண்டிருப்பதைவிட அவ்விஷயங்களில் தன்னை

மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அறியும் போதகர்கள், அதே விமர்சனங்களால் பதவி உயர்வு பெறுகிறார்கள்.

- போதகர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராய் வாழ்வது அவசியம். ஆனால் என்னைப்பற்றிய விமர்சனமே வரக்கூடாது என நினைப்பது தேவையற்ற மன உளைச்சலைத் தருகிறது (மத்.11:16-19).

2. சபைக்குள் தன்னுடன் இருக்கும் ஆதரவு நண்பர்கள் மட்டும் இருக்க வேண்டும். தன்னை எதிர்க்கும் விமர்சகர்கள், எதிரிகள் இருக்கக்கூடாது என்று ஒரு போதகர் கருதினால், **யுத்த தழும்புகள்** உள்ள மாவீரனாக உலாவ முடியாது. மாறாக மென்மையான யுத்தப் பயிற்சியற்ற இளவரசனாகவே என்றும் வாழ முடியும். ஊழியத்தின் உயரமும் அம்மட்டுமே வளரும்.

3. எந்த ஒரு அற்புதம் செய்தாலும், எந்த ஒரு போதனை போதித்தாலும் அதில் ஒரு குற்றம் கண்டுபிடித்து தர்க்கம் பண்ணின பரிசேயர், சதுசேயர்களை எதிர்கொண்டு அவர்களை சரியான விதத்தில் கையாண்டதால் தான் நான்கு சுவிசேஷங்களிலும் "**ஜீவ வார்த்தை**" வெளிப்பட்டது. நல்ல போதனைகள் நமக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறோம்.

4. உண்மைப் போட்டியாளர்களா? அல்லது கற்பனைப் போட்டியாளர்களா? என வகையறுப்பது அவசியம்.

- சுற்றியுள்ள அனைவரையுமே போட்டியாளர்களாக கருதி கற்பனை யுத்தம் செய்வோர், காலவிரயம் செய்பவர்களாகிறார்கள்.

## III. நமக்குள் ஏற்பட வேண்டிய ஆயத்தம்

1.கடந்த வருடம் என்ன செய்தேனோ அதையே செய்வது, கடந்த காலம் எந்தளவு திறமைகள் இருந்தனவோ அதை மட்டும் காப்பாற்றி வைத்திருப்பது போன்ற நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் வரும் போட்டிகளை சமாளிப்பது கடினம்.

2. சபை விசுவாசிகளும் இதை கற்றுக்கொள்ள வேண்டும். 30 வருடங்கள், நானேதான் இந்த இலாகாவில் இருக்க வேண்டும், எனவே எந்த ஒரு திறமைசாலிகள் புதிதாக வந்தாலும் போட்டியாக கருதி அவரை விரட்டிவிடுவதைத் தவிர்க்க வேண்டும். இன்னொரு Sunday Class Teacher, Youth Leader-ம் எழும்பட்டும், என சிறந்த திறமைசாலிகளை அனுமதிப்பது அவசியம். அவர்களது திறமைகளுக்கு ஈடாக தனது திறமையையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். அதுவே சிறந்த பலன்களைத்தரும்.

3.ஸ்தல சபை போதகருக்கு விமர்சனங்கள் எதிர்ப்புகள் இருந்தாலும் "**போட்டியாளர்கள்**" பெரும்பாலும் எழும்புவதில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள சக போதகர்களில் சிலரை போட்டியாளராக ஒரு போதகர் கருதமுடியும்.

### இறுதியாக

- மொத்தத்தில் நமக்கு எதிரான எதிர்க்கருத்தோ, விமர்சனங்களோ, எதிர்ப்போ இருக்கக்கூடாது என்கிற மனநிலையை அகற்றுவோம்.
- நல்ல ஆரோக்கியமான மனநிலையிலோ, எதிர்மனநிலையிலோ நம்மோடு போட்டிபோடும் சிலர் எந்நாளும் நமக்கு இருப்பார்கள்.
- நமக்கு இருக்கும் போட்டியாளரின் உயரத்தையே நாம் எட்டிப்பிடிக்க முடியும். எனவே சூழ்நிலை மூலமாகவோ, மனிதர் மூலமாகவோ ஏற்படும் போட்டியே எனக்கு வரக்கூடாது என ஜெபிக்க வேண்டாம்.
- மாறாக சவாலுள்ள போட்டிகள் தொடர்ந்து புதிய வருடத்திலும் எழும்பினாலும் சந்திக்க தயராவதே நல்லது. தேவனோடுள்ள உறவிலும், கிருபை வரங்களிலும், செயல்திறன்களிலும் நம்மை வளர்த்துக் கொள்வோம். 2024 மட்டுமல்ல எந்நாளும் நம் தேவன் வெற்றி தருவார்.



# வாலிபமும் நட்பும்

**Rev. D. சாலமோன்**

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்

கிறிஸ்துவின் ஸ்தானிகர் ஊழியத்தின் சார்பில் Joyful and Fruitful 2024 New Year வாழ்த்துக்கள். வாலிபர்கள் என்றாலே நண்பர்கள், நண்பர்கள் என்றாலே அது வாலிபத்தில் மிக இன்றியமையாதது.

### தேவனுடைய சாயல் : Image of God

தேவன் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார். 'சாயல்' என்பது சரீர ஒற்றுமை; வெளிப்புற தோற்றம் அல்ல, அதற்கும் மேலாக தேவனுடைய தன்மை. பகுத்தறிவு, உருவாக்குதல், அறிவாற்றல், உறவு ஐக்கியம் மற்றும் உள்ள தன்மைகளாகும். Man is emotional being as well relational being மனிதருடைய அனைத்து அடிப்படை தேவைகளும் உறவுகள் மூலமாக சந்திக்கப்படுகிறது. முதல் மனிதன் ஆதாமை தேவன் சிருஷ்டித்து உலகத்திற்கு கொண்டுவரும் போது பூரண புருஷனாக படைத்தார். அனைத்தையும் நல்லது என்று கண்ட தேவன் தனிமையை நல்லதல்ல என்று கண்டு, ஏற்ற துணையாக ஏவாளை கொடுத்தார். நட்பு, உறவு இல்லாமல் மனிதன் இல்லை.

### சிருஷ்டிகர் VS வஞ்சகன் / Designer VS Deceiver

'நட்பு' என்பது வாலிபத்தின் இன்றியமையாத தன்மையாகும்! நட்பு உளவியல் சார்ந்தது. வாழ்வில் வெறுமை, தனிமை, பெருமை ஆகியவை ஒருவரது வாழ்க்கையை தடம் புரளச்செய்கிறது. தேவைகள் உடையவனாக படைத்த தேவன் அந்த தேவையை சந்திக்க வழிவகை செய்துள்ளார். Designer way is constructive, but Deceiver way is destructive. படைத்தவரின் வழியில் சந்திக்கபடுவது 'பேரானந்தம்' அது பாதுகாப்பானது.வஞ்சிக்கிறவன் வழியில் சந்திக்கப்பட்டால் அது சிற்றின்பம். பேரானந்தம் அது மிகவும் ஆபத்தானது.

### நட்பில் சமூக வலைதளத்தின் பங்கு - Role of Social Media

Friendshipக்காக வாலிபர்கள் அதிகமாக சமூக வலைதளத்தைப் பயன்படுத்துகிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளை நீ யாரோடு பழகுகிறாய், எங்கு போகிறாய், என்று கேட்பது மாறி, இன்றைய நிலையில் நீ எந்த app, device, Website உடன் பழகுகிறாய் என்று கேட்கும் நிலையாகி விட்டது. ஒரு இளைஞர் இவ்வாறாக சொல்கிறார். நான் எனது கைபேசியை (Mobile) அதிகம் நேசிக்கிறேன். ஏனென்றால் எனது நண்பர்கள் அனைவரும் அதில் இருக்கிறார்கள். (I Love my Mobile; because my friends live in it).

Friends, bestie, daring, gang, dress sense, living together, sex partner, making viral, social media, pagan mythology stories in cartoon and games, zombie, AI ஆகியவை வாலிபர்களை எளிதில் தவறான பாதையில் மூழ்கடித்து விடுகிறது. இவை அனைத்தும் தொடங்குவது நட்பு என்ற ஆரம்ப நிலையில். 'உன் நண்பன் யார்'? என்று சொல் 'நீ யார் என்று சொல்கிறேன்'. ஒருவரின் சுபாவம், வளர்ச்சி ஆகியவற்றை தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டது.

**யார் நண்பன்? Who is a friend?**

Friend is someone (virtual-real) with whom you share a bond (not just friendship band) bases on mutual affection, trust, understanding, and support. நட்புக்கு வயது, இனம், மொழி, போன்ற எதுவும் தடைகள் இல்லை. தாண்டி செல்ல கூடியது. காலங்கள் கடந்து நிற்கும் பந்தம் ஆகும்.

**நண்பர்கள் தினம் - Friendship Day**

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் முதல் ஞாயிறு "Friendship Day" என்று 1958ஆம் ஆண்டு முதல் Joce Hall என்பவரால் ஏற்படுத்தப்பட்டு கடைப்பிடிக்கப்படுகிறது.

**பரிசுத்த வேதாகமத்தில் நட்புக்கு சில உதாரணங்கள் - Biblical model of Friendship**

தானியேல்-நண்பர்கள் (தானி.2:17) தாவீது-யோனத்தான் (1சாமு.18:3) இயேசுகிறிஸ்து யோவான், லாசரு, யூதாஸ்காரியோத்து. பவுலின் சிநேகிதர்கள். தேவன்-மோசே, தேவன் ஆபிரகாம் (யாக். 2:23).

**நட்பு உருவாகும் நிலைகள் : Stages of Friendship**

அறிமுகம் (Acquaintance) → தினசரி சந்திப்பு (Causal) → நெருங்கிய நண்பர் (Close Friends) → மிக நெருக்கமான (Intimacy) → வாழ்நாள் நண்பர் (Lifelong Friends)

நட்பு ஒரு மனிதனின் ஆயுள் காலத்தில் சிறுபிராயத்தில் ஆரம்பித்தாலும் Teen Age இளம் வயதில் பருவத்தில் வலுப்பெறுகிறதாக Erik Erickson கூறுகிறார்.

**நட்பு வளையம். FRIENDSHIP ZONE. இயேசு கிறிஸ்து தனது வாழ்வில் பின்பற்றிய மாதிரி**

PUBLIC 5000 பேருக்கு அதிகமான பொதுவான மக்கள்

PERSONAL 70, 12 சீஷர்கள்

INTIMATE - 3 பேதுரு, யாக்கோபு, யோவான்

MOST INTIMATE - 1 அன்பின் சீஷன் யோவான்



உங்கள் அப்பா, அம்மா உடன் பிறந்தவர்கள், சபை போதகர், சபை நண்பர்கள், மற்ற நண்பர்கள், Virtual Friends இயேசு கிறிஸ்து ஆகியோரை நீங்கள் வைக்கும் இடம் எது?

உங்கள் நட்பு வளையத்தில் சரியான நபர் சரியான இடத்தில் இருக்கிறார்களா?

**நண்பர்களை தேர்ந்தெடுப்பது எவ்வாறு? Key elements in Choosing a Friend**

1. Shared values and interest நன்மதிப்பு அர்த்தமுடைய நபர்கள்
2. Positive influence நேர்மறையான தாக்கம் ஏற்படுத்துதல்
3. Trust and reliability நம்பகமான உறுதியான
4. Empathy and understanding புரிந்துகொள்ளுதல், ஒருமித்த உணர்வு
5. Respectful communication கருத்துக்களை மதித்தல்
6. Healthy boundaries ஆரோக்கியமான எல்லைகள், கட்டுப்பாட்டுடன் பழகுதல்
7. Diversity வித்தியாசங்களை மதித்தல்.

இதன் தொடர்ச்சி 36-ம் பார்க்க



# மிகைப்படுத்தப்பட்ட கிருபை

## (Hyper Grace) பகுதி-1

**Rev.M. ஜான் செலின் M.Th.,**

பெத்தேல் ஏ.ஜி. சர்ச். அருமனை

கிருபை என்ற பதம் இன்றைக்கு சபையை தாண்டி சமூகத்திலும் பரவலாக பேசப்படுகிறது. உதாரணமாக ஒரு கிரிக்கெட்டில் இந்தியா வெற்றிப் பெற்றால் கூட கிருபை என்று மீம்ஸ் போடுகிறார்கள். எனவே கிருபையின் உபதேசத்தை குறித்து வேதத்தின்படி அறிந்து கொள்ளவேண்டிய கட்டாயத்தில் நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம்.

### I.மித மிஞ்சிய கிருபையின் அர்த்தம் (The Definition of Hyper grace)

இந்த மித மிஞ்சிய கிருபைக்கு hyper grace, extreme grace, ultra grace என்றெல்லாம் பல ஆங்கில பெயர்கள் இருக்கிறது. ஆனால் *hyper* என்ற கிரேக்க வார்த்தைக்கு எல்லாவற்றுக்கும்மேலே என்ற அர்த்தத்தில் over, beyond and above என்ற அர்த்தம் கொடுக்கப்படுகிறது.

ஆனால் கிருபை என்ற வார்த்தை grace என்ற ஆங்கில வார்த்தையின் மொழி பெயர்ப்பாகும். **Grace** என்ற பதம் ***gratia*** என்ற பழைய ஃப்ரெஞ்ச் மொழியில் இருந்து கடன் வாங்கப்பட்டதாகும். நீண்ட நாட்கள் ஏங்கி காத்து இருந்த ஒருவருக்கு யாரும் உதவிசெய்ய முன் வராதபோது அவரை விலைக்கிரயம் செலுத்தி மீட்டெடுத்தல், தேவ தயவின் பரிசு மற்றும் தேவ உதவி என்பவைகள், இந்த கிருபைக்கு கொடுக்கப்பட்ட அர்த்தங்களாகும். ஆனால் இந்த ஞான அர்த்தத்தை மிதமிஞ்சிய கிருபையின் உபதேசக்காரர்கள் விட்டு விட்டு கிருபையின் மதிப்பை மலிவாக்குவார்கள்.

### II. இந்த மிகைப்படுத்தப்பட்ட கிருபையின் தோற்றம்

புசிப்போம், குடிப்போம், மாம்ச இச்சைகளின் படி நடப்போம் என்ற நூதன, நவமான தத்துவம் கொண்ட எப்பிக்குரியர்கள், ஸ்தோயிக்கர்கள், பிலேயாம் மற்றும் யேசபேலின் ஆவிகள் ஆதி சபையை இந்த உபதேசத்தில் புரட்டி எடுக்க, நிக்கொலாய் போன்ற மூப்பர்கள் இதில் விழுந்து போனார்கள் என்றும் நாம் வசனத்தில் பார்க்க முடியும் (அப்.17:18-22; வெளி. 2:14-15; 20-23).

இந்த 21 ஆம் நூற்றாண்டில் சீனாவில் கிறிஸ்தவர்கள் நடுவில் தலைத்தூக்கிய மிதமிஞ்சிய கிருபையின் சமரச தாக்கத்தை லிம்லயத் கண்டு 22-11-2009 அதற்கு எதிராக முதன் முதலில் தனது blog post வழியாக குரல் கொடுத்தார். 15-5-2012 அன்று மால்டோவா நாட்டின் அமெரிக்க மிஷனரி கிரெக் மேன்றலா அவர்களோடு ஸ்டீவ் பிரிமியர் அவர்கள் நடத்திய podcast உரையாடலில் பாலியல் தொழில் செய்வோர் கிருபையின் பெயரை பயன்படுத்தி அதை நியாயப்படுத்துவதாக கூறி மெய்யான கிருபையின் விளக்கத்தை கொடுத்தார்.

Rev. மைக்கேல் பிரவுன் அவர்கள் அமெரிக்காவின் பிரபல கிறிஸ்தவ பத்திரிக்கையில் மிதமிஞ்சிய கிருபையை சுட்டிக்காட்டி 28.2.2013 அன்று எழுதவே, அதை வழிமொழிந்து Rev.மைக் பைக்கிள் அவர்கள் youtube இல் மிகைப்படுத்தப்பட்ட கிருபையின் வஞ்சனைகள் என்ற தலைப்பில் ஒரு காணொலி

பதிவேற்றம் செய்தார். 7.1.2014 அன்று மைக்கேல் பிரவுன் என்பவர் மறுபடியும் 21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய வஞ்சனையான மாயக்கிருபை என்ற தலைப்பில் ஒரு புஸ்தகம் எழுதி மேற்கத்திய நாடுகளில் உள்ள மித மிஞ்சிய கிருபையின் உபதேசத்தை முழு உலகிற்கும் வெளிச்சம் போட்டு காண்பித்தார்.

## III. தற்கால மிகைப்படுத்தப்பட்ட கிருபையின் உபதேசக்காரர்கள்

இக்காலத்தில் முழு உலகிலும் இந்த உபதேசக்காரர்கள் நிரம்பி இருக்கிறார்கள். சிங்கப்பூரில் ஜோசப் பிரின்ஸ், நியூசிலாந்தில் பால் எல்லிஸ், அமெரிக்காவில் ஜோயல் ஆஸ்டின், அன்ட்ரூ பார்லி மற்றும் தமிழ் நாட்டில் ஜஸ்டின், ஜேசுவடியான், பால் சேகர் போன்றவர்களும் இந்த வரிசையில் வருகிறார்கள். இவர்கள் நிரந்தர இரட்சிப்பு, பாவத்தை கடிந்துக்கொள்ளாத தேவன், நிபந்தனையற்ற அன்பு மற்றும் மன்னிக்கபட்டவர்கள் என்ற கருத்தை முன் வைத்து தேவன் இரக்கம், தயவு மற்றும் கிருபையுடையவர் என்பதை மட்டும் வலியுறுத்துகிறார்கள்.

## IV. மிகைப்படுத்தப்பட்ட கிருபையின் கள்ள உபதேசங்களும் அவைகளுக்கு பரிசுத்த வேதம் தரும் பதில்களும்

பெரும்பாலும் இவர்கள் தங்கள் மனம்போன போக்கில் வாழ கிருபையை கேடயமாக பயன்படுத்துவார்கள். அதன் அடிப்படையில் அவர்களின் கிட்டத்தட்ட 12 விதமான உபதேசங்களும் பரிசுத்த வேதம் தரும் பதில்களும் குறித்து தொடர்ந்து கவனிப்போம்.

### A. இயேசு கிறிஸ்துவை விட கிருபையை மிகைப்படுத்துவார்கள்

கிருபைக்கு சொந்தக்காரராக இருக்கும் இயேசுவை விட்டுவிட்டு கிருபை கிருபை என்றாலும் அது ஒன்றுக்கும் உதவாது. பிதாவாகிய தேவனாலும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாலும், பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தாலும் தான் நமக்கு கிருபையும் சமாதானமும் கிடைக்கிறது. (2கொரி.13:14;எபே.1:2; யோவான் 1:17). இயேசு கிறிஸ்து பிரசன்னமானதால் தான் நமக்கு கிருபை கிடைக்கிறது. இயேசுவின் சமுகம் இல்லாமல் கிருபை இல்லை. தீத்து 2:11; 2 தீமோ.1:10. தான் பிதாவின் பூரண சாயலில் இருந்தும் தன்னை தாழ்த்தி மாம்ச சாயலான இயேசு கிறிஸ்துவின் சிந்தை இல்லாமல் கிருபை இல்லை. ஏனெனில் தாழ்மை உள்ளவர்களுக்கு தான் கிருபை. பிலி.2:1-8; யாக்.4:6; 1 பேதுரு 5:5; ரோமர் 5:15; யோவான் 1:14; கொலோ.1:16. ஆதியில் வார்த்தையாக பிதாவோடு இருந்தும், தேவனாக இருந்தும் அவர் வேத வாக்கியங்கள் படி உண்மையும் சத்தியமுமாக, ஜீவனுமாக இந்த உலகில் வந்தார். உண்மையும் சத்தியமுமான அதாவது பிதாவின் வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவும் வேத வசனமும் இல்லாமல் கிருபை இல்லை. சத்தியமும் கிருபையும் ஒன்றை ஒன்று சந்திக்கும் ( அப். 20:32; 2 யோவான் 1:3; யோவான் 1:1-15)

### B.இயேசு கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை அசட்டை செய்வார்கள்

இயேசு கிறிஸ்துவை தங்களுக்கு சமமாக பாவித்து நண்பர், உறவினர்போல கணக்கில் கொண்டு இவர்கள் ஏதோ விசேஷமானவர்கள் அதினால் தான் பிதா இயேசு கிறிஸ்துவை சிலுவையில் பாடுபட விட்டுக்கொடுத்தார் என்பார்கள். இவர்கள் இயேசுவின் மகிமையை திருடி தங்கள் காமவிகாரத்திற்கு ஏற்றவாறு அவரின் கர்த்தத்துவ மகத்துவங்களை அசட்டை செய்வார்கள் (யூதா 4, 8 & 2 பேதுரு 2:10).

இயேசு கிறிஸ்து பிதாவின் மகிமைக்கு ஒப்பானவராக ராஜாவாக பிறந்தார் (மத்தேயு 2:11). அவர் பிறப்பே அதிசயம். அவருக்காக பல முறை வானம் திறந்தது.

பாவம், சாபம், வியாதி, மரணம், பிசாசு, இயற்கையின் அதிகாரம் சர்வ வல்லமை பெற்ற ஒரே மகத்துவமானவர். என்னை ஆராதியுங்கள் என்று கேட்காமலே அவர் பிறப்பில் இருந்தே அவரின் மகத்துவம் கண்டவர்கள் விடுதலை பெற்றவர்கள் இவர் பாதத்தில் விழுந்து ஆராதிக்க, அதிகாரத்தோடு பரலோகராஜ்யம் குறித்து பிரசங்கிக்க, பரிசேயரின் பாவங்களை எதிர்த்து குரல் கொடுக்க, நானும் பிதாவும் ஒன்று என்று சொல்ல, சிலுவையில் அத்தனை பாடுகளையும் உள்வாங்கி, அதன் நடுவிலும் எந்த தீங்கும் செய்யாமல் மூன்றாம் நாளில் மரணத்தை உத்தரித்து, பிதாவின் பூரண மகத்துவம், அதிகாரம், வல்லமை அனைத்தும் பெற்று பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றியிருக்கும் மகிமை பொருந்திய இயேசு கிறிஸ்துவின் பூரணத்தால் தான் நாம் கிருபை பெற்றோம் (யோவான் 1:14-17; 2 பேதுரு 1:16-18; எபி.2:9; எபே.1:20; அப். 9:1-12;12:21-23; தானி.4:34;6:26; ஏசா.9:6-7). இந்த மகிமைதான் எந்த மனிதனையும் பிரகாசிக்கச் செய்யும். இந்த மகிமைதான் பவுலை நடுங்கவும் திகைக்கவும் செய்தது. மேலும் மகிமை பொருந்தியவராக இயேசு சீக்கிரம் வரப்போகிறார்.

## C.இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவை விட அவர் கொடுக்கும் நன்மைகளை அனுபவிக்க தேடுவார்கள்

இவர்கள் இயேசு கிறிஸ்து யார்?, அவரது மகிமை, வல்லமை, மகத்துவம் என்ன என்பதை அறியும் அறிவை விட இந்த உலகில் அவரை கொண்டு என்ன நன்மை பெற முடியும் என்று தான் பார்ப்பார்கள். இயேசு கிறிஸ்து பிதாவுக்கு சமமாக இருந்தும், தானும் பிதாவும் ஒன்று என்றும், என்னை கண்டவன் பிதாவை கண்டவன் என்று சொல்லியும் சமாரியா ஸ்திரீ, பேதுரு போன்றவர்கள் இயேசு ஜீவனுள்ள தேவ குமாரன் என்பதை அறிந்து திறவுகோல்களை பெற்றனர் (யோவான் 4:1-26;6:50-69;மத்.16:18). பெரும்பாலும் ஒரு கூட்டம் இயேசுவை தங்கள் சரீர தேவைகளுக்காக தான் தேடினார்கள். பழைய ஏற்பாட்டில் பிதாவை அறியும் அறிவை பிதா விரும்பியது போல புதிய ஏற்பாட்டில் எல்லாரும் இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவால் நிரம்பி அவரின் சித்தம்செய்து அந்த வாசனையாகிய கிருபையால் நிரம்ப வேண்டும் (ஓசி.6:6;4:6; ஆபக் 2:14; கொலோ.1:9-10; 2கொரி.2:14;10:5; 1 தீமோ.2:4). இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் வெளிப்பட்ட வல்லமை, அவரை உயிரோடு எழுப்பிய மகிமையின் மகத்துவம், அந்த உயிர்த்தெழுதலில் பங்கு பெற வேண்டும், அவரின் பாடுகளின் ஐக்கியம், அதன் மேன்மையை அறிய வேண்டும். அதற்காகதான் எல்லாவற்றையும் நஷ்டம் என்றும் குப்பை என்று எண்ணி ஆசையாக தொடருகிறேன். அதை அறியும் மனக்கண்கள் எல்லாருக்கும் வேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார், விரும்புகிறார் (எபே.1:19-23; பிலி.3:10-14). அதோடு இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவுதான் கிருபையையும் சமாதானத்தையும் தருகின்றது என்றும் அது சும்மா நம்மை வீணராக இருக்க விடாது என்று பேதுரு சொல்கிறார் (1 பேதுரு 1:2; 2 பேதுரு 1:3,8,2:20; ஏசா.1:3-6;எரே.10:14). இயேசு கிறிஸ்துவை அறிகின்ற அறிவில் வளராமல் ஒருபோதும் கிருபையும் சமாதானமும் பெருகவே பெருகாது.

## D.இயேசு கிறிஸ்துவின் கிருபை, இரக்கம், தயவு போன்ற சுபாவங்களை சுட்டிக்காட்டி அவரின் மகத்துவங்களை தூசிப்பார்கள்

இவர்கள் இயேசு கிறிஸ்துவை மிகவும் எளிதாக எடுத்துக் கொள்வார்கள். அவரை அடைவது எளிது என்றும் அவரை முழுவதும் கிருபை உள்ளவர் என்று சொல்லி அவரின் மறுபக்கத்தை எளிதாக்குவார்கள்.

இயேசு கிறிஸ்து அன்புள்ளவர் தான். தான் குழந்தையாக இருக்கையில், ஆலயத்தில் தனக்குரிய சுத்திகரிப்பின் பிரமாணத்தை நிறைவேற்ற ஒப்புக்கொடுத்த இயேசு, ஆலயத்தில் ஏசாயா சுருளை வாசித்து, நோயாளிகளை சுகமாக்கி, பிரசங்கம் செய்த இயேசு, ஆலயம் கொள்ளையர் வசம்போனபோது கையில் சாட்டையை எடுத்து சுத்திகரிக்கவும் செய்தார். சகேயுவின் வீட்டில் போன உடனே அவன் தன் அநியாத்தை சரி செய்கிறான் (மத்.21:13; லூக்.19:1-8). இயேசு கிறிஸ்து தன்னில் பாவம் உண்டென்று சொல்லக் கூடுமா என்று சவால் விட்டார்! அவர் தாழ்மையின் ரூபமாக வந்தாலும் பட்சிக்கும் அக்கினியாக இருக்கிறார். அக்கினியால் சுட்டெரிக்க தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது (எபி.12:29, மத்.3:12-13). இயேசு கிறிஸ்துவை வெறும் அன்புமிக்கவராக பார்த்த யோவான் பத்மு தீவில் அவரது மகத்துவங்களை கண்டவுடன் அவர் பாதத்தில் விழுந்தான். பேதுரு பலமுறை இயேசு கிறிஸ்து மாம்சத்தில் இருந்தபொழுது அவர் பாதத்தில் விழுந்தார். ஏனெனில் இயேசு கிறிஸ்துவுக்குள் தான் மீட்பு, ஞானம், புத்தி, மகிமை, விவேகம் போன்ற விசேஷ கிருபைகள் இருக்கிறது. இந்த இயேசு கிறிஸ்து சீக்கிரம் நியாயாதிபதியாக வருகின்றார் (வெளி 1:8-20). இயேசு கிறிஸ்துவின் நீதி, பரிசுத்தம், மகத்துவம், அவரின் மேல் உள்ள பயபக்தி இல்லாமல் வேதத்தில் சொல்லப்பட்ட கிருபை கிடைப்பது அரிது.

**E.இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை கொண்டாட்டமாக மட்டும் பார்த்து பாடுபட வேண்டுவதில்லை என்பார்கள்**

ஊதாரி மகன் சொத்துக்கு ஆசைப்பட்டு மரித்துபோன தன் தகப்பனை நினைத்து மகிழ்ந்த கதை தான் இவர்கள் கதை. இயேசு சிலுவையில் அறையப்பட்டதால் இனி துக்கம் இல்லை. கண்ணீர் இல்லை என்பார்கள்.

சிலுவை நாம் கொடூர பாவிகள் என்றும், இயேசு கிறிஸ்துவின் அன்பை நினைத்து உள்ளம் உடைந்து அவரது இரத்தத்தை நினைத்து, அவரது அன்பின் ஆழம் நீளம் உயரம் இன்னதென்று அறிந்து கிருபை மேல் கிருபை பெற தான் சிலுவை. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு, மனம் திரும்புதல் மற்றும் பரிசுத்த மீட்பு இல்லை (எபி.10:19-20; எபே.6:24; 2தெச.2:16). இயேசு கிறிஸ்து சிலுவையில் பாடுபட்டு மரித்தார். அவமானங்களை சகித்தார். நாமும் சிலுவை சுமக்க வேண்டும். பாடு அனுபவிக்க வேண்டும்.

நன்மை செய்து பாடு அனுபவிப்பது தேவ சித்தம். அவரின் சித்தப்படி நடக்க விரும்பினால் பாடுகள் உண்டு. அப்படி பாடுகள் வழியாக தான் பரலோகம் செல்ல முடியும். அதன் மூலம் தான் ஆளுகை, நித்திய ஜீவன் போன்ற பலன்களான கிருபை கிடைக்கும். பாடுபடாமல் ஒரு கிருபையும் இல்லை (பிலி.1:7; 1பேதுரு 3:7; 4:1-10). இப்படி பாடுபடும்போது தான் சீஷத்துவம் உருவாகி நமது குணங்களில் மாற்றம் வருகின்றது. ஆவிக்குரிய கனிகள் பாடுகளின் வழியாக தான் வெளிப்படுகிறது. சகல கிருபை உள்ள தேவன் கொஞ்சகாலம் பாடு அனுபவிக்கும் நம்மை சீர்படுத்தி, பெலப்படுத்தி பக்குவப்படுத்தி, சிட்சித்து, உருவாக்கி நமது மாம்ச இச்சைகளை சிலுவையில் அறைய ஒவ்வொரு நாளும் கற்றுக் கொடுத்து அவரை போல மாற்றுகிறார் (யோவான் 16:2, 33; அப்.14:22; ரோம. 5:3-9; 2கொரி.6:3-10; 1:6-7; 11:23-27; 1பேதுரு 2:19-21; 4:1-19; 3:17; 5:10; எபி.12:5-11;:15-16;பிலி.1:7,29). இந்த சிலுவையின் உபதேசம் தான் நமக்கு தேவ பலனும் பெலமுமாக

இருக்கின்றது. இந்த சுவிசேஷத்தை தான் சீடர்கள் பிரசங்கித்தார்கள். பூரண கிருபை அவர்கள் மேல் இருந்தது. இந்த சுவிசேஷம் தான் மாறுபாடான சந்ததிகளை விட்டு நம்மை விலக செய்தது. இந்த சிலுவையின் உபதேசம் குறித்து பிரசங்கித்த பவுலின் சரீர பெலவீனத்தில் தான் கிருபை பூரண பெலனை கொடுத்தது (அப்.2:33-36; 4:10; 33; 3:6-7, 12-20; II கொரி.1:23, 2:2, 13:4, கொலோ.1:20; 2:15; ரோமர் 1:6). பொதுவாக இந்த மிதமிஞ்சிய கிருபைக்காரர்கள் சுவிசேஷம் அறிவிப்பதை விட்டு சமயம் பார்த்து ஆவிக்குரிய சபைகளில் உள்ள விசுவாசிகளை கவிழ்த்து போடுவார்கள்.

## F.விசுவாசம் மற்றும் கிருபையை சொல்லி ஆவிக்குரிய கிரியைகளை உதாசீனம் செய்வார்கள்

இவர்கள் கிருபையை சொல்லி தப்பவும், விசுவாசத்தை சொல்லி ஏதாவது பெறவும் தான் சிரத்தை கொள்வார்கள்.

வேதத்தில் யாரெல்லாம் தேவனை விசுவாசித்தார்களோ அவர்கள் எல்லாம் விசுவாச கிரியைகளை செய்தார்கள். நோவா பேழையை கட்டினார். ஆபிரகாம் தன் சுய தேசம் விட்டார். ஆபேல் சிறந்ததை கொடுத்தார். தாவீது பாவ உணர்வடைந்தார். தங்கள் சுய விருப்பத்தை செய்யவோ மாம்சம் மனம் விரும்பியதை செய்யவோ ஒருபோதும் விசுவாசத்தை பயன்படுத்தவில்லை (எபி.11:1-40). விசுவாசம் மட்டும் போதும். எதற்கு ஜெபிக்க வேண்டும்? என்று கேட்கும் மித மிஞ்சிய கிருபைக்காரர்கள் இயேசு கிறிஸ்து ஊக்கமாக ஜெபித்தது, சீடர்கள் ஜெபத்தில் தரித்து இருந்தது, சபையார் கருத்தாக ஜெபித்தது குறித்து வாய் திறக்கவே மாட்டார்கள். போராடி, உள்ளம் உடைஞ்சு அழுது ஜெபிப்பது எல்லாம் இவர்களுக்கு நக்கலாக தெரியும். பாடுகளின் மத்தியிலும் உறுதி, பரிசுத்த ஜீவியம், அப்போஸ்தல உபதேசத்தில் உறுதி, கனி கொடுக்க வேண்டும், நற்கிரியைகள் செய்ய வேண்டும் என்ற காரியங்களை அற்பமாக பார்ப்பார்கள் (2கொரி.9:8; அப்.2:42-47). கர்த்தரின் பந்தியை அற்பமாக எண்ணி, ஒவ்வொரு பந்தியிலும் நாம் நம்மை சரிபண்ணி பரிசுத்தம் மேல் பரிசுத்தம், கிருபை மேல் கிருபையடைய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் ஏனோ தானோ என்று அனுசரிப்பார்கள் (Iகொரி.11:18-34).

-தொடரும்

---

31-ம் பக்க தொடர்ச்சி

## நட்பில் பின்பற்ற வேண்டிய Five F's of Friendship

தேவனை அறிய சரியான வயது வாலிப வயதாகும். 'நீ உன் வாலிப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை' என்று பிரசங்கி 12:1-ல் வாசிக்கிறோம்.

1. Fear of God. பிரசங்கி 12:13;11:9 கர்த்தருக்கு பயப்படும் பயம்.
2. Faithfulness. ஆதி.39:5 அனைத்திலும் உண்மை.
3. Firm in your conviction. தானி.1:8 விசுவாசத்தில் உறுதி.
4. Focus on your future. எபி.11:26 எதிர் காலத்திற்கு ஆயத்தப்படுதல்.
5. Follow Jesus. மத்.10:38 இயேசுவை பின்பற்றுதல்.

ஒரு நண்பனிடம் மனம் விட்டு, உணர்வு பூர்வமாக பேசுவது போல தேவனிடம் உங்கள் நட்பு அமையட்டும். இயேசுவுக்கு நீங்கள் ஓர் உண்மையான நண்பராகவும், உங்கள் நண்பரை இந்த ஆண்டில் இயேசுவுக்கு நண்பராக்கவும் பரிசுத்த ஆவியானவர் உங்களை நடத்துவாராக!



# வர்த்திக்கப்பண்ணுவார்

(The Lord will increase you)


Rev. பெகின் சாமுவேல்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, இந்த இதழ்வாயிலாக உங்களை சந்திப்பதிலும் நமது தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை உங்களோடு பகிர்ந்துகொள்வதிலும் மிக்க சந்தோஷம் அடைகிறேன். கர்த்தர் உங்களையும், **உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார்** (சங்.115:14). இந்த வருடத்திலும் நம் பிள்ளைகளை கர்த்தர் வர்த்திக்கப்பண்ணுவார்.

ஒருமுறை கிரேக்க போர்ச்சேவகன் ஒருவன் இரவு வேளையிலே துயரத்தோடுகூட ஒரு பேப்பரை எடுத்து, தனக்கு மொத்தம் எவ்வளவு கடன் இருக்கிறதென்பதை கணக்கிட்டுப் பார்த்தான். அது பெரும் தொகையாக இருந்தது. அந்த பேப்பரின் கீழே, இதை எல்லாம் எனக்காக செலுத்துவது யார்? என்ற கேள்வியும் எழுதிவிட்டு தற்கொலை செய்துகொள்ள தீர்மானித்தான். மிகுந்த களைப்பு காரணமாக அப்படியே தூங்கிவிட்டான். அவன் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் அந்தப் பக்கமாக மகா அலெக்ஸாண்டர் வந்து அவரின் எழுதியிருந்ததை வாசித்தார். அவன் பக்கத்திலிருந்த துப்பாக்கியை பார்த்தார். அவனுடைய மனநிலையை உணர்ந்துகொண்டவராய், இதையெல்லாம் செலுத்துவது யார்? என்று எழுதப்பட்டதன் கீழே, மகா அலெக்சாண்டராகிய நான் செலுத்தித் தீர்ப்பேன் என்று எழுதி கையெழுத்திட்டார்.

அந்தப் போர்வீரன் தூக்கத்திலிருந்து எழுந்து அந்த பேப்பரைப் பார்த்தபோது, அதில் அலெக்சாண்டர் தன் கடனை எல்லாம் தீர்ப்பதாக கையெழுத்திட்டிருந்தது அவனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. தற்கொலை செய்ய வேண்டும் என்று நினைத்திருந்த அவன் தனது எண்ணத்தை மாற்றினான். மகா அலெக்சாண்டரின் வாக்கு அவனை கடன் எல்லாவற்றிலிருந்தும் நீக்கி விடுதலையாக்கிற்று.

தேவபிள்ளைகளே, இன்றைக்கு உங்கள் பிள்ளைகளை வர்த்திக்கப் பண்ணுவேன் என்று தேவன் அளித்திருக்கிற வாக்கை நீங்கள் விசுவாசியுங்கள். தேவன் தம் வாக்கை நிறைவேற்ற வல்லமையுள்ளவராயிருக்கிறார். எவைகளில் தேவன் நம் பிள்ளைகளை வர்த்திக்கப்பண்ணுவார் என்பதை காண்போம்.

### 1. ஆண்டவருடைய நாமம் மகிமைப்படும்படி வர்த்திக்கப்பண்ணுவார்
### The Lord will increase you to glorify His name

சங்.115:1ல் கூறியுள்ளபடி தம் நாமம் மகிமைப்படும்படி அவர் உங்கள் பிள்ளைகளை வர்த்திக்கப்பண்ணுவார். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமை கர்த்தர் மிகவும் நேசித்தார். தேவன் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் வாக்குத்தத்தம் கொடுத்தார். உன் சந்ததியை உன் பிள்ளைகள் மூலம் வானத்தின் நட்சத்திரம்போல் வர்த்திக்கப்பண்ணுவேன் என்றார். அவர்களுடைய சந்ததிகள் மூலம் தேவநாமம் மகிமைப்படும்படியான அநேக காரியங்களை கர்த்தர் செய்தார். இவ்வருடம் நம்

பிள்ளைகளையும் கர்த்தருடைய நாமம் அவர்கள் மூலம் மகிமைப்படும்படி வர்த்திக்கப்பண்ணி மகிமைப்படுத்துவார். அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப்போவதில்லை, அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை (எரே. 30:19).

### 2.விக்கிரகக்கட்டுகளிலிருந்து விடுவித்து வர்த்திக்கப்பண்ணுவார்
### The Lord will increase you by delivering you from idols

சங்.115:2-5-ல் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்முடைய பிள்ளைகளை விக்கிரகத்தின் கட்டுகளிலிருந்து காக்கவல்லவர். பிசாசானவன் அநேக பிள்ளைகளை இன்றளவும் கிறிஸ்துவின் அன்பை அறியவிடாமல், அவர்களை தன்னுடைய ஆளுகைக்குள் கட்டி வைத்திருக்கிறான். அவர்களை விடுவிக்கும் மேலான பொறுப்பை தேவன் நமக்கு தந்துள்ளார். இந்த வருடத்திற்குள்ளாக 50 ஆயிரம் சிறுபிள்ளைகளை சந்திக்க வேண்டும் என்ற தரிசனத்துடன் செயல்பட இருக்கிறோம். தரிசனத்தை தந்தவர் அதை நிறைவேற்ற உதவி செய்வார்.

### 3. பிள்ளைகளை ஆசீர்வதித்து வர்த்திக்கப்பண்ணுவார்
### The Lord will increase you by blessing the children

வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் (சங்.118:15). ஆபிரகாமின் மகனான ஈசாக்கு கர்த்தர் சொன்ன தேசத்திலே விதை விதைத்தபோது அவனை கர்த்தர் நூறு மடங்கு ஆசீர்வதித்து பெருக பண்ணினார். கர்த்தர் அவனுக்கு கொடுத்த ஆசீர்வாதம் அந்த வருஷத்தோடு முடிந்து போகவில்லை. அவன் வர வர விருத்தியடைந்து நாளுக்கு நாள் பெருகினான். அவன் செய்த காரியத்தையெல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்தார். அவனை வர்த்திக்கப் பண்ணினார். அவன் செய்ததெல்லாம் வாய்த்தது. இந்த வாக்குத்தத்தத்தின்படியே தேவன் நம் பிள்ளைகள் வாழ்க்கையிலும் செய்வாராக.

அன்பானவர்களே, இந்த வருடத்திற்கான விடுமுறை நாட்களில் நடைபெற இருக்கும் AGVBS ஆயத்த வேலைகள் ஆரம்பமாகி, நடந்து கொண்டிருக்கிறது. தேவ வழிநடத்துதலின்படி இந்த வருட AGVBSக்கான தலைப்பு 'தீபம்' தெரிந்தெடுக்கப் பட்டு, அதற்கான பாடத்திட்டங்கள், பாடல்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றன. விரைவில் உங்களை சந்திக்க இருக்கிறோம். இந்த ஊழியங்களுக்காக நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

---

### பரிபூரண ஜீவன் போட்டி எண் -2 (விடைகள்)

1. தேவனுடைய சேனை - மக்னாயீம் (32:2)
2. கல்தூண்- பெத்தேல் (28:18,19)
3. வாக்குவாதம் - ஏசேக்கு (26:20)
4. மீறுதல் உன்மேல் நிற்கும் - பாரேஸ் (38:29)
5. கோபுரம் - ஏதேர் (35:21)
6. பீறுகிற ஓநாய் - பென்யமீன் (49:27)
7. கல் குவியில் - கலயெத் (31:47)
8. எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறவர்கள்-மேய்ப்பர்கள் (46:34)
9. தேவனே சாட்சி - மிஸ்பா (31:50)
10. நல்ல ஈவு - செபுலோன் (30:20)
11. உயிர் தப்பி பிழைத்தேன் - பெனியேல் (32:30)
12. விரியன் - தாண் (49:17)
13. ரோமம் மிகுந்தவன் -ஏசா (27:11)
14. பலிபீடம் - ஏல் எல்லோகே இஸ்ரவேல் (33:20)

15. தேவன் என்னை பலுகப்பண்ணினார் - எப்பிராயீம் (41:52)
16. பெரிய துக்கம் கொண்டாடல் - ஆபேல் மிஸ்ராயீம் (50:11)
17. கோவேறு கழுதை - ஆனாகு (36:24)
18. ஓன் பட்டணம் - போத்திபிரா (46:20)
19. இருபது வெள்ளிக்காசு - யோசேப்பு (37:28)
20. தகப்பனுக்கு உத்தரவாதி - யூதா (44:16,32)
21. நல்ல நாடு - ராமசேஸ் (47:11)
22. கொட்டாரங்கள் - சுக்கோத் (33:17)
23. தேசத்தின் பிரபு - சீகேம் (34:2)
24. அல்லோன் பாகூத் - தெபொராள் (35:8)
25. சிவப்பு நூல் - சேரா (38:29,30)

## போட்டி எண் : 2 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: பிரியா; ஜெயசிலின்; S.முத்துலெட்சுமி; மயில்; G.முத்துலெட்சமி; மாது; T.கலா எஸ்தர் மாசிலாமணி; ராணி பிளஸ்ஸிங்; புஷ்பவல்லி; தாவீது S.மாரிமுத்து; E.கலா; V.விஜிராஜா; ராதாமணி; மரகரம்; டோரா; ரேஷ்மா; பிரபா; அன்னைமேரி; தங்கமணி; மஞ்சு; எஸ்தர் (அ.பு); மகேஸ்வரி; கோகிலா; T.சாராள்; V.பியூலா; J.சுமதி; ஜெபா செல்லச்சாமி; ஞானகுரு; பூங்கோதை; கிரிஜா; | **ஆறுமுகநேரி**: செல்வ பிரியா; M.ஏஞ்சல்; M.கிருபா; இருதய ஸ்டெர்லின்; பிரெய்ஸி; கிரேஸி; நிவேதா; சுஷ்மிதா; அனன்சி; | **ஸ்ரீவில்லிபுத்தூர்**: R.காபிரியேல்; T.மெசி; குளோரி; அபிராமி; K.அழகு நாச்சியார்; நித்யா; நெல்சன் செல்வராஜ்; எஸ்தர் இந்திரா; J.வசந்தா; | **திருநின்றவூர்**: M.மாலதி; S.சரண்யா; ஏஞ்சலின் ஜெனிஸ்; J.லாவண்யா; ரோஸ்லின் மேரி; அனுலா; எழிலரசி; ஏடா டாரியா; கேத்ரின்; லீலா பரணி; | **புதுக்கோட்டை**: A.லலிதா; |**இறச்சகுளம்:** சகாய ஷாஜி ஜெனி; ரேனுகா ரூபன்; ராதிகா; ஜெஸ்மின்; மகிழ் ஜெயந்தி; சிவதர்ஷினி; M.கலா; கனகமணி; | **நெல்வாய்**: அருணா; கற்பகம்; மலர்விழி; நர்மதா; தேன்மொழி; ஆர்த்தி; | **மதுராந்தகம்**: ரோஸ் பாண்டியன்; சுனிதா ரோஸ்லின்; ராணி தாமஸ்; ஹரினி மெர்லின்; ரேனுகா; ஸ்டெல்லா மேரி; |**ஆண்டிபட்டி**: அன்னாள்; தேவபாக்கியம்; புளோரியா; தபீத்தாள் ராணி; | **உடுமலைப்பேட்டை**: ஏஞ்சல் மார்ட்டின்; சூசன்னாள்; E.காபிரியேல்; சுகந்தி வீரமணி; | **ஒட்டப்பிடாரம்**: ஞானவடிவு; சரஸ்வதி; புஷ்பராணி; பானுமதி; | **தூத்துக்குடி**: அன்னாள் மேரி; பெனியூசியா; புருசிமா; **மடத்துக்குளம்**: பரிமளா; கிரேஸ்மேரி; சரண்யா; | **ஓசூர்**: ஜெமிந்தா; ஜடா மனோகரன்; விஜயா; | **இராமன்புதூர்**: லீதியாள்; ஜான்சி ராணி; அன்னம்மாள்; | **கோயம்புத்தூர்**: கிறிஸ்டினா அபிகாயில்; மேரி டென்சில்; குளோரிபால்; | **திருவாரூர்**: பாஸ்டியன்; கிளமாண்டின்; | **பழனி**: T.பிரீத்தி; K.சாந்தி; | **மதுரை**: அனிதா; கலைச்செல்வி; ஜெயா; மேரிராஜ்; கனகவல்லி; | **ஆரல்வாய்மொழி**: ஜினோ; | **பாளையங்கோட்டை**: எஸ்தர் மகாராஜன்; | **தர்மபுரி**: ரூத்; வெங்கடாசலம்; | **அரசூர்**: ரோஸ்லின் சாந்தி; | **நாட்டார்மங்களம்**: J.எஸ்தர்; | **திருநெல்வேலி**: T.செல்வகுமார் வீனஸ்; | **எடப்பாடி**: சுதா அரசு; புஷ்பா; அஞ்சலி அரசு; | **கடையநல்லூர்**: ஸ்டெல்லா டாரீஸ்; ஆஷா தேவி; வினோலியா; செல்வி இந்திராணி; தங்கராஜ்; | **சென்னை**: ஜாய் கிளாடிஸ்; ரேணுகா; மெர்லின் ஹெலன் பிரிதியா; மேரிகுட்டி; | **வளசரவாக்கம்**: விஷ்வா ரோசி; புவனேஸ்வரி தேவன்; ஜெப செல்வி; நிர்மலா எஸ்தர்; | **சூளைமேடு**: M.அருள்மேரி | **திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; | **அரும்பாக்கம்**: A.மேரி; | **பள்ளிக்கரனை**: ஜோதி மகிமைதாஸ்; | **சேத்துப்பட்டு**: ஜெபா ஹெலன்; மாதரசி; ராபர்ட் ஜார்ஜ்; ரெக்ஸி ஈஸ்வரன்; மரகரம்; | **கொட்டிவாக்கம்**: எஸ்தர் விஜயராணி; ரஞ்சிதா; அஞ்சலி; | **குரோம்பேட்டை**: கோமதி குமார்; T.ரெபெக்காள் | **KTC நகர்**: பிரேமா ரூத்; ஹெரின்; சில்வியா; | **திருச்சி**: ப்ளோரா அருணா; குளோரி பெல்லா; சாந்தி; ஜஸ்டஸ் டேனியல்; கிறிஸ்டி மகாலஷ்மி; |**தேனி**: செண்பக புஷ்பா ஜேம்ஸ்; |**வீரபாண்டிய பட்டணம்**: சுகிர்தா டைட்டஸ்; |**மணப்பாறை**: ஜூலியட் தம்புராஜ்; |**கம்பம்**: ஜோதிமணி; |**திருநின்றவூர்**: K.மார்த்தாள்; வின்சி; |**அச்சங்குளம்**: அப்பியா இவாஞ்சலின்;| **கவரைப்பேட்டை**: ஜெயபாலன்; தங்கம்; டெய்சி; நந்தினி; |**கூவத்தூர்**: எட்வர்ட்; |**மூலைக்கரைப்பட்டி**: T.தமிழ்ச்செல்வி; பிரிஸ்கில்லா; |**புளியங்குடி**: ஜெபஞானம்; சுந்தரி; |**நாகமலை**: ஹில்டா எலிசபெத்; |**ஆம்பூர்**: கிரிஜா சந்தியா; |**பெருந்துறை**: கெத்சியாள்; ஹெப்சிபா; |**நாங்குனேரி**: K.மரகதம்; |**நாகலாபுரம்**:ஷைனி; லில்லி ஜெனட் தங்கம்; சாராள்; |**ஸ்ரீவைகுண்டம்**:J.மேரி;|**கூடங்குளம்**: டேனியல் பால்; சோனியா;

|**மறவன்விளை**: M.J.V.ஆஷா; **செய்துங்கநல்லூர்**; சாந்தி; |**ஆத்தூர்**: லில்லி; |**ஈரோடு**: K.சௌந்தர்யா; |**புதுஆயக்குடி**: R.மாரியம்மாள்; |**சாத்தூர்**: விசித்ரா; |**வத்ராப்**: சிவகாமி; ஜெபராணி; |**கள்ளக்குறிச்சி**: தங்கம் சாக்கோ; |**காசிமேஜர்புரம்**: ரூத்; |**மருதகுளம்**: ஜெபக்குட்டி மோசஸ்; |**பழையகாயல்**; கிருபா பிளஸ்ஸி; எலிசபெத்; |**முக்கூடல்**: இராமலெட்சுமி; |**வில்லியனூர்**: L.புரோனிக்கா; |**நாசரேத்**: தாசன் மோசஸ்; பொன்மணி; |**கடாட்சபுரம்**: ரேவதி கில்பர்ட்; |**சுரண்டை**: குளோரி ஞானம்;| **தஞ்சாவூர்**: M.தேவகுமார்; |**கல்லல்**: அபிஷாக்;|**திருவள்ளூர்**:ஆனந்தகுமார்; |**திசையன்விளை**: செல்வபாக்கியம்; |**ஆலங்குளம்**: ஸ்டெல்லா மேரி; |**விளாத்திகுளம்**: கீர்த்தனா; |**திண்டுக்கல்**: சலோமி; அலமாதி: அமலா; |**சேலம்**: பெட்ரிஷியா டேவிட்; |**நாகப்பட்டினம்**: வசந்த கோகிலம்; |**ஆவடி**: சந்திரா சாலமோன்ராஜ்;| **பெருமாள்புரம்**: ஜான்ஸி: |**களக்காடு**: ஜெயமெர்சி; |**வேளச்சேரி**: கேத்ரின் கிரேஸ்; |**கல்லுக்குறி**: W.டால்டன்.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -3
## யாத்திராகமம் (1 - 20 அதிகாரங்கள்) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. மோசேயின் தாய் பெயர் என்ன?
2. எபிரெய மருத்துவச்சிகளின் பெயர் என்ன?
3. ஆரோனின் சகோதரியும், தீர்க்கதரிசியுமான இவள் பெயர் என்ன?
4. மீதியான் தேசத்தின் ஆசாரியனாகிய ரெகுவேலின் குமாரத்தியின் பெயர் என்ன?
5. அம்மினதாபின் குமாரத்தியும், நகசோனின் சகோதரியுமாகிய இவள் பெயர் என்ன?
6. பரீட்சை பார்த்ததினிமித்தம் அந்த ஸ்தலத்தின் பெயர் என்ன?
7. மோசேயின் மாமனாகிய இவன் பெயர் என்ன?
8. எகிப்தின் ராஜாவாகிய இவன் பெயர் என்ன?
9. எண்பத்து மூன்று வயதுமாயிருந்த இவன் பெயர் என்ன?
10. நூற்று முப்பத்து மூன்று வருஷம் உயிரோடிருந்தவனின் பெயர் என்ன?
11. எங்கே மகா கூக்குரல் உண்டாயிற்று?
12. எங்கே உள்ள தண்ணீர் கசப்பாயிருந்தது?
13. எங்கே கர்த்தர் மோசேயை வரவழைத்தார்?
14. எங்கே கல்மழை இல்லாதிருந்தது?
15. எங்கே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன் என்று கர்த்தர் சொன்னார்?
16. எங்கே மூன்று நாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று?
17. எங்கே புகைக்காடாய் இருந்தது?
18. எங்கே மோசே ஆடுகளை ஓட்டி வந்தான்?
19. எங்கே தவளைகள் செத்துப்போயிற்று?
20. எங்கே கர்த்தர் மோசேயை நோக்கி நீ திரும்பிப்போ என்றார்?

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.02.2024



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**

16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## காட்டுமன்னார்கோயில், திருவேற்காடு, ஐதராபாத் ஆகிய இடங்களில் நடைபெற்ற Global University பட்டமளிப்பு விழாக்கள்










## திருச்சி தெற்கு மற்றும் மத்திய மண்டல வாலிபர் முகாம்





## விருதுநகர் மண்டல சிறுவர் முகாம்






## செங்கல்பட்டு மண்டல மிஷன் கன்வென்ஷன்





Registered News Paper Regd. No. 8206 / 62

வாசகர்கள் அனைவருக்கும்

# இனிய புத்தாண்டு

நல்வாழ்த்துக்கள்

NEW YEAR 2024

ASSEMBLIES OF GOD

## ASSEMBLIES OF GOD
## தமிழ் பிரதேசம்
## எழுப்புதலின் 10 ஆண்டுகள்
ஜெபக்குறிப்புகள்

35,000 ஜெப பங்காளர்கள்

300 புதிய சபைகள்

350 புதிய ஊழியர்கள்

ஒரு ஆண்டிற்குரிய இலக்குகளுக்காக ஜெபியுங்கள் 2024

35,000 புதிய அங்கத்தினர்கள்

350 மூப்பர் பயிற்சி

60 மிஷனரிகள்

350 கிராம வீட்டு சபைகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664